Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 24 (30.11.2002) சனிக்கிழமை இதழ் : 60

IIS இன் கணனிக் கற்கைநெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003

விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.12.2002

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

# பிரபாகரனின் தீர்வு யோசனை அரசினால் ஏற்கக் கூடியதே !

**விண்ணாணம் விநாசியர்**



சுவாமி தான் அரசியல் கோமாளி எண்டதை இப்பவும் தவறாம நிரூபிச்சிட்டார்.

## நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில்



(கொழும்பு)

**மாவீரர் தின உரையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்வைத்த சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கமைந்த தீர்வானது, இணக்கத்துக்கு வரமுடியாத ஒன்றல்ல என நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.**

விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டுக் கோரிக்கையை முற்றாக கைவிட்டுவிட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தம்மிடம் கூறியதாகவும் பிரதமர் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் நடந்த கூட்டம் பற்றி பிரதமர் நேற்று நடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்தார். அவ்வுரையில் அவர் மேலும் தெரிவிக்கும்போது,

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கமைவான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விட்டுக்கொடுப்பு அமைச்சர் பீரிஸ் பாராட்டு

சமாதான முன் முயற்சிகளில் விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுத்துச செயற்படுவதால் சர்வதேச அளவில் அவர்களுக்கு ஆதரவு பெருகி வருகிறது என அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். மாற்றுக்கொள்கைக்கான நிலையம் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அவர் பேசுகையில், சமாதானப் பேச்சுக்களில் இரு தரப்பும் ஒருவருக்கு ஒருவர் புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து வருகின்றனர். நாம் எதிர்பார்த்திராத வகையில் புலிகளின் விட்டுக்கொடுப்பு அமைந்துள்ளது (10ஆம் பக்கம் பார்க்க)

## சட்டப்பிரச்சினையாலேயே இந்தியா பங்குபற்றவில்லை

### நாடாளுமன்றத்தில் பிரதமர் விளக்கம்

சில சட்டப்பிரச்சனைகளால் இந்தியப் பிரதிநிதிகள் ஒஸ்லோ மாநாட்டின் சில அமர்வுகளில் மாத்திரம் கலந்து கொள்வதாக தெரிவித்தார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச, இந்தியா ஒஸ்லோ மாநாட்டில் ஏன் பங்குபற்றவில்லை எனக் கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சட்டப் பிரச்சினைகள் காரணமாக இந்தியா பேச்சுக்களில் கலந்து கொள்ள முடியாது இருப்பதை நோர்வேக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபாலகிருஷ்ண காந்தி தமக்கு அறிவித்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் ஒஸ்லோ பேச்சு வார்த்தைகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்குமுகமாக அமைச்சர் மிலிந்த மொறகொட புதுடெல்கி செல்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

## தமிழ்ச்செல்வன், கருணா ஒஸ்லோ சென்றடைந்தனர்



அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனும் கேணல் கருணாவும் ஒஸ்லோவை சென்றடைந்தனர். யூ.எல்-563 இலக்க விமானத்தில் இவர்கள் தம் பயணத்தை கட்டுநாயக்காவிலிருந்து ஆரம்பித்தனர்.

முன்னதாக இவர்கள் விமானப்படை ஹெலிகொப்டர்களில் கொழும்பு வந்து சேர்ந்திருந்தனர்.

இதேவேளை, இவர்கள் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்றுச் சந்திக்கவில்லை என நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது. இச்சந்திப்பு நடைபெறும் என நேற்று முன்தினம் பத்திரிகைகளில் வெளியான தகவல்களில் உண்மை ஏதுமில்லை எனவும் நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது.



## ஒஸ்லோ மாநாட்டுக்கு இந்தியா செல்லாதது புத்திசாலித்தனமாம்

### சுப்ரமணியம் சுவாமி கூறுகின்றார்



(புதுடெல்கி)

ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாடு மிகப்பெரும் தோல்வியென வர்ணித்துள்ளார், இந்தியாவின் பிரபல அரசியல்வாதியும் ஜனதாக்கட்சித் தலைவருமான சுப்பிரமணியம் சுவாமி.

ஒஸ்லோ மாநாடு பற்றிக் கருத்துத் தெரிவித்த அவர்-

ஒரு சர்வதேச மாநாடு என்ற ரீதியில் ஒஸ்லோ வழங்கிய உதவித்தொகை மிகத் குறைவான ஒன்று என்றும், விடுதலைப்புலிகளுக்கு சட்ட ரீதியான அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்க 40 நாடுகள் மேற்கொண்ட முயற்சி தோற்றுவிட்டதாகவும் கூறினார்.

இந்தியாவிலிருந்து எந்த ராஜதந்திரிகளும் பங்குபற்றியிருந்தால் அவர்கள் 'பொடா' சட்டத்தின் கீழ் குற்றமிழைத்தவர்களாக ஆகியிருப்பார்கள் என்றும், இந்தியா பங்குபற்றாதது புத்திசாலித்தனமானது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுடன் இணைந்த மாநிலமாக இலங்கையை ஆக்குவதே சரியான தீர்வாக இருக்கும்போது- பிரதமர் ரணில்,விடுதலைப்புலிகளிடம் சரணடைந்து தீர்வினைத் தேடுவது பொருத்தமற்றது என்றும் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

## பரந்தன் கண்ணியில் உழவியந்திரம் சேதம்

(கிளிநொச்சி)

விதை நெல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் ஒன்று பரந்தனில் நேற்று கண்ணிவெடியில் சிக்கி பலத்த சேதமடைந்தது.

பரந்தன் குமரபுரம் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் கனகபுரத்தைச் சேர்ந்த ஐயப்பு என்பவரின் உழவு இயந்திரத்தின் பெட்டி பலத்த சேதமடைந்தது. தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. மேற்படி பகுதியில் அண்மையில் மீள்குடியமர்வு நடைபெற்றது. தொடர்ந்து அப்பகுதியில் நெல் விதைப்பும் தற்போது நடைபெற்று வருகிறது.

## புலிகளின் பொலிஸ் நிலையம் திறப்பது பற்றி ஒஸ்லோவில் பேச்சு

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புலிகளின் பொலிஸ் நிலையங்களோ நீதிமன்றங்களோ இருப்பதாகத் தெரியவில்லை என உட்துறையமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்விடயம் தொடர்பாக ஒஸ்லோ சந்திப்பில் நாம் புலிகள் தரப்புடன் முக்கியமாகப் பேசுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மிலிந்த இந்தியாவுக்கு நேற்றிரவு புறப்பட்டார்



ஒஸ்லோ சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்னிரவு 7.15 மணிக்கு கொழும்பிலிருந்து யூஎல்-191 இலக்க விமானத்தில் இந்தியாவுக்குப் பயணமாகியுள்ளார்.

புதுடெல்கியில் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பேசப்பட்ட விடயங்கள் பற்றியும் இனி நடைபெறப்போகும் புலிகளுடனான சந்திப்பில் பேசப்படவுள்ள விடயங்கள் பற்றியும் அவர் கலந்துரையாடுவார் எனத் தெரியவருகிறது.

அவர் அங்கிருந்தே ஒஸ்லோவுக்கு பயணமாவார் எனக் கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாடாளுமன்றத்தில் இன்று நெடுந்தீவு விவகாரம்

### அமைச்சர் மகேஸ்வரன் முன்னறிவித்தல்

இன்று நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் நெடுந்தீவு விவகாரத்தைப் பேச இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

சபாநாயகருக்கு அவர் அனுப்பிய இந்த முன்னறிவித்தலில், நெடுந்தீவு பிரதேசசபையினுள் கடற்படை பலவந்தமாக உட்புகுந்துள்ளதால் அப்பிரதேச மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

SERENDIB

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

விமான சேவை

J/FT/P - 021 - 2223816, 0777 - 801038,
(சி-148) CMB 505632 - 390128 - 0777-517018

# ஐ.நா.ஆயுதப் பரிசோதனைக்குழு 3 வது நாளாகவும் ஈராக்கில் சோதனை!

## - பூரண ஒத்துழைப்புக் கிடைப்பதாக பாராட்டு -



சோதனையிடும் ஐ.நா.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை ஆயுதப் பரிசோதகர் ஹன்ஸ் பீலிக்ஸ் தலைமையிலான ஆயுதப் பரிசோதர்களின் இரண்டு குழுக்களும் பன்னிரண்டு சர்வதேசப் பத்திரிகையாளர்களுடன் கடந்த மூன்று நாட்களாக ஈராக்கில் தமது பரிசோதனைகளை நடாத்தி வருகின்றனர்.

தலைமைப் பரிசோதகர் ஹன்ஸ் பீலிக்ஸ் தமது குழுவினருக்கு ஈராக் கடந்த மூன்று தினங்களாக பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும், இது நல்லதொரு தொடக்கம் எனவும் கூறியுள்ளார். ஆனால், தமக்கும் ஈராக்கிற்கும் எதிர்காலத்தில் எவ்வித முரண்பாடுகளும் இல்லாமல் இவ்வாயுதப் பரிசோதனை முயற்சிகள் முடிவடையும் என எதிர்பார்க்கவும் முடியாது என்றும் பீலிக்ஸ் கூறியுள்ளார்.

அதேவேளை, அமெரிக்க அரசாங்கத்தின் தொடர்ச்சியான அழுத்தமே, ஈராக்கினை முரண்பாடற்ற நிலையில் ஆயுதப் பரிசோதகர்களோடு ஒத்துழைக்க நிர்ப்பந்தித்து வருவதாக அமெரிக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் போல் வூல்வ்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் பரிசோதகர்களுடன் சென்ற சர்வதேச செய்தி நிறுவனத்தினைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவர், ஆயுதப் பரிசோதனையின் போது பாக்தாத்தின் ஒரு தொழிற்சாலையில் இரசாயனப் பொருளான அந்திராக்ஸ் மாதிரிகள் கிடைக்கப் பெற்றதாக தகவல் அனுப்பியுள்ளார்.

இதேவேளை, டிசம்பர் 8 ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடமுள்ள ஆயுதங்கள் பற்றிய முழு விபரத்தினையும், ஈராக்- ஆயுதப் பரிசோதகர்களிடம் தெரிவிக்க வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் தீர்மானமாகும். அடுத்த வருடம் ஜனவரி 27ஆம் திகதி முன்னதாக ஆயுதப் பரிசோதனைக் குழு, தனது முதல் அறிக்கையினைச் சமர்ப்பிக்கவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# லிக்யுட் கட்சித் தலைவராக ஏரியல் ஷரோன் மீளத் தெரிவு

(ரெல்அவிவ்)

இஸ்ரேலிய பிரதம மந்திரி ஏரியல் ஷரோன், லிக்யுட் கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் லிக்யுட் கட்சியின் தலைமைப் பதவிக்கு- பிரதமருக்கும், வெளிவிவகார அமைச்சர் நெதன்யாகுவிற்கும் இடையிலான போட்டியில், நெதன்யாகுவை விட 20 வீத வாக்குகளால் ஏரியல் ஷரோன் வெற்றி பெற்றார்.

லிக்யுட் கட்சியின் தலைமைக்கு ஷரோன் தெரிவு செய்யப்பட்ட செய்தியால், அல் கெய்டா அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டதென்று சந்தேகிக்கப்படும் கென்யாவின் பரடைஸ் ஹோட்டலின் மீதான தாக்குதல், இஸ்ரேலில் பெருமளவு முக்கியத்துவம் பெறவில்லை.



வென்றார் ஏரியல் ஷரோன்

ஜனவரி மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் லிக்யுட் கட்சி வெற்றி பெறும் வாய்ப்புக்கள் உள்ளதாகப் பத்திரிகைகள் மேற்கொண்ட கணிப்புகள் மூலம் தெரிய வந்துள்ள நிலையில் மீண்டும் ஷரோன், லிக்யுட் கட்சியின் தலைமையில் இருப்பது அக்கட்சியின் வெற்றியை மேலும் உறுதி செய்யும் என நம்பப படுகிறது.

# ஜேர்மனிய ஏவுகணைகள் இஸ்ரேலுக்கு விற்பனை



ஏவுகணை பரிசோதிக்கப்படுகிறது

இஸ்ரேலுக்கு ஏவுகணைகளை விற்க ஜேர்மனி அரசு உடன்பட்டுள்ளது. ஜேர்மனியிடம் இருந்து ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக, இஸ்ரேல் கருத்து வெளியிடுகையில் - தனது தாய் நாட்டினைப் பாதுகாப்பது வரலாற்றுக் கடமை எனக் கூறியுள்ளது.

ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய சூழ்நிலையில் இஸ்ரேல் இருப்பதனையே, ஏவுகணைகளை ஜேர்மனியிடமிருந்து வாங்குவதற்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதுபற்றி இஸ்ரேல் முடிவுக்கு வரக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, ஈராக் மீது அமெரிக்காவினால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஜேர்மனி தனது ஆதரவினை கொடுக்க மறுத்துள்ளது.

ஜேர்மனியின் தலைவர் ஸ்கொறோடர் பத்திரிகைகளுக்கு கருத்து வெளியிடுகையில் - தாம் இஸ்ரேலுக்கு ஆயுத உதவி செய்வதனையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும்,

இஸ்ரேல் தன்னை பாதுகாத்துக் கொள்ளத் தாம் கொடுத்த ஏவுகணைகள் மூலம், நாட்டுக்குள் வரும் எதிரிகளின் ஏவுகணைகளை அழித்துவிட முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# எயிட்ஸ் நோயினால் பெண்கள் அதிக பாதிப்பு

உலகில் நாற்பது மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கடைசியாக கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் ஆண்களை விட பெண்களே அதிகமானவர்களாவர். எயிட்ஸ் நோய்க்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் புள்ளிவிபரங்களின்படி, உலகளாவிய ரீதியில் 3.1 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

உலகில் தென்னாபிரிக்காவிலேயே மிகக்கூடுதலான எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதாக கணக்கெடுப்புக்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, எதிர்காலத்தில் எயிட்ஸ நோய் பற்றிய போதியளவு விழிப்புணர்வு நடவடிக்கைகளை எடுக்காதுவிடின் கிழக்கு ஐரோப்பா, சீனா மறறும் இந்தியா போன்ற நாடுகளில் தீவிரமாக எயிட்ஸ் நோய் பரவுவதற்கான சாத்தியங்கள் தென்படுவதாக ஐக்கிய நாடுகளின் சபையின் அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

# விளையாட்டு

## ஆஷஸ் கிண்ண டெஸ்ட் கிரிக்கெட்

# இங்கிலாந்து அணியினர் மீண்டும் மோசமான நிலையில்



தொடரும் மகிழ்ச்சியில் அவுஸ்திரேலியா

(பேர்த்)

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் டெஸ்ட் போட்டித் தொடரில், மூன்றவாது டெஸ்ட்டின் முதலாம நாள் ஆட்டத்தில், அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சுக்கு இங்கிலாந்து அணி திணறியது. முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்தை வெற்றி கொண்ட அவுஸ்திரேலியா, மூன்றாவது போட்டியிலும தனது திறமையைக் காட்டி வருகிறது.



திணறிய இங்கிலாந்து

நேற்றைய முதலாம் நாள் ஆட்ட முடிவில் ஸ்கோர் விபரம்- இங்கிலாந்து 64.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களையும், அவுஸ்திரேலியா ஆட்டநேர இறுதிவரை 23 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 126 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

கடந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் பங்குபற்றாத அவுஸ்திரேலியாவின் பிரட்லீ நேற்றைய ஆட்டத்தில் பங்கேற்று, இங்கிலாந்தின் முக்கிய மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்திச் சாதனை படைத்தார். இங்கிலாந்தின் அநேக ஆட்டக்காரர்கள் தம் மட்டையை மேலுயர்த்திப் பந்தைப பின்னால் கொடுத்ததன் மூலமே ஆட்டமிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மதிய உணவு இடைவேளையின் பின் இங்கிலாந்து அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்துச் சரிந்தன.தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணி, ஆட்டநேர முடிவில், ஜஸ்ரின் லாங்கர் (19 ஓட் டங்கள்) ஹேய்டன் (30 ஓட்டங்கள்) ஆகியோரை இழந்திருந்தது.



பிரட்லீ

நிறஞ்சனாஸ் சங்கானை

அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா நடித்த

சிட்டிசன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00

(சி-187)

ராஜா

யாழ்ப்பாணம்.



நான்காவது வாரமாக

அஜித் (இரட்டை வேடம்)

கிரண், மீனா நடித்த

வில்லன்

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)

இயக்கம்: K.S.ரவிக்குமார்.

(சி-151)

REEL PEACE

சமாதானச் சுருள்

திரைக்கதை உருவாக்கல் பயிற்சி முகாம்

நீங்கள் கதை சொல்லும் திறன் உள்ளவரா?
உங்கள் கதைக்கு திரைவடிவம் கொடுக்க அருமையான சந்தர்ப்பம்.

10 நிமிட குறும்படம் ஒன்றிற்கான கதையை 2 பக்கங்களுக்குள் அடங்கும் வகையில் டைப் செய்து (கையால் எழுதப்பட்டதாயின் 4 பக்கங்கள்) உங்கள் பெயர், வயது, பால்,தொழில், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து டிசம்பர் 10ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் படியாக எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட கதை சொல்லுனர்களுக்கு பிரித்தானிய திரைப்படத்துறை திரைக்கதை எழுத்தாளர்கள் மற்றும் லண்டன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் திரைக்கதை உருவாக்கல் பயிற்சி வழங்கப்படுவதுடன் சிறந்த கதைகளுக்கு திரைவடிவமும் கொடுக்கப்படும்.

எமது முதற்சுற்று பயிற்சி முகாம் டிசம்பர் 16ஆம் திகதி ஆரம்பமாகும்.

தொலைபேசி தொடர்புகட்கு 0777 ~ 176138.
தொலைநகல் 021 ~ 222 ~ 2360.

கதையும் விண்ணப்பமும் அனுப்ப வேண்டிய முகவரி:-
"சமாதானச் சுருள்"
புறநிலைப் படிப்புகள் அலகு,
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

சி/236

# சமாதானப் பேச்சுக்களில் ஊடகவியலாளருக்கு கட்டுப்பாடுகள் விதிக்க அரசு ஆலோசனை!

## செய்திகளைத் திரிவுபடுத்துவதாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் சமாதானப் பேச்சுக்களில் ஊடகவியலாளர்களை அனுமதிப்பதில் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

அண்மையில் ஒஸ்லோவில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், விடுதலைப்புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பேசிய விடயமொன்றை, 'ரொய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் திரித்து வெளியிட்டதாகக் கூறியே இந்நடவடிக்கை பற்றி ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நோர்வே அரசாங்கத்துடன் பேசப்பட்டிருப்பதாகவும், இது ஒரு நல்ல அணுகுமுறையாக இல்லாதுவிடினும் - இனிவரும் காலங்களில், இவ்வாறு செய்திகள் தவறாக வெளியிடப்பட்டால், அது சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்கும் என்பதாலேயே - இவ்வாறான ஒரு முடிவுக்குத் தாம் தள்ளப்பட்டிருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

எனினும் இது தொடர்பான உறுதியான இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது.

வன்முறைகளைக் கைவிடுவது பற்றிய கலாநிதி பாலசிங்கத்தின் பதிலொன்றே 'ரொய்ட்டர்' செய்தி ஸ்தாபனத்தால் தவறாக வெளியிடப்பட்டதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வட- கிழக்கில் தளபாட வசதியின்றி கல்வி கற்கும் 23 ஆயிரம் மாணவர்கள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில உள்ள பாடசாலைகளில் சுமார் 23 ஆயிரம் மாணவர்கள் தளபாடவசதியின்றிக் கல்விகற்று வருவதாக 'யுனிசெப்' நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொனறின் மூலம் தெரிய வந்துள்ளது.

இதேவேளை - கடந்தகால யுத்த நடவடிக்கையினால் 199 பாடசாலைக் கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் 321 பாடசாலை வகுப்பறைகள் தற்காலிகக் கொட்டில்களில் இயங்கி வருவதாகவும் 'யுனிசெப்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ரயில்வே திணைக்களம் விரைவில் இந்திய நிறுவனத்துக்கு விற்பனை!

(கொழும்பு)

அரசாங்கம் ரயில்வே திணைக்களத்தினை தனியார் மயப்படுத்த தீர்மானித்துள்ளது. அரச தொழிற்துறை மறுசீரமைப்பு ஆணைக்கு அடுத்த வருட முற்பகுதியில் இந்தியக் கம்பனிக்கு ரயில்வே போக்குவரத்தினை ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளது.

தற்பொழுது குறிப்பிட்ட இந்தியக் கம்பனி ரயில்வேப் போக்குவரத்தினைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சியின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகின்றது.

ரயில்வேப் பாதைகள், ரயில்வே நிலையங்கள் மற்றும் ரயில்வே திணைக்களத்தின் அசையாச் சொத்துக்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருக்கும். ஆனால் போக்குவரத்துச் செயற்பாடுகள் அனைத்தும் இந்தியக் கம்பனியின் பொறுப்பில் இருக்கும் எனத் தெரியவருகின்றது.

இவ்வாறான தனியார் மயப்படுத்தல் முறைமையானது ரயில்வே போக்குவரத்தினை வினைத்திறனுடையதாக மாற்றும் அதேவேளை, தனியார்மயமாதலை எதிர்க்கும் ரயில்வே ஊழியர்களின் எதிர்நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# புகை கக்கும் வாகனங்களின் அனுமதிப்பத்திரம் ரத்தாகும்

## ஜனவரி முதலாம் திகதி முதல் அமுல்

(மானிப்பாய்)

புகையை அதிகளவில் வெளியிட்டு சூழலை மாசுபடுத்தும் வாகனங்களுக்கு எதிர்வரும் ஆண்டில் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சர் ருக்மன் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

பாதையில் ஓடத்தகுதியான வாகனங்கள் என 'தகுதிச்சான்றிதழ்' வழங்கப்படும் வாகனங்களுக்கு மட்டுமே எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

வாகனங்களால் வெளியிடப்படும் விஷவாயுக்கள் காரணமாக நகர சூழல் மாசடைகின்றது. இதனால் நகரங்களில் வாழ்கின்ற பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வாகனங்கள் மூலம் வெளியாகும் இந்தப் புகையின் காரணமாக பொதுமக்கள் பலவித நோய்களுக்கும் ஆளாகின்றனர். எனவே மக்களின், சூழலின் நலனைக் கருத்தில் கொண்டு மேற்படி நடவடிக்கையை எடுத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

(100)

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.00 |
| சுபஹ் | 5.15 |
| உதயம் | 6.36 |
| லுஹர் | 12.30 |
| அஸர் | 3.52 |
| ம.்ரிப் | 6.22 |
| இஷா | 7.36 |

# புலிகளின் நீதிமன்றங்கள், காவல்துறை பத்து வருடங்களாக இயங்கி வருகின்றன

## பிரதமர் ரணில் ஜனாதிபதியிடம் நேரடியாகத் தெரிவிப்பு

ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாடு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் விளக்கமளித்துள்ளார். நேற்றுமுன்தினம் காலை 11.30 மணியளவில் ஆரம்பித்த பேச்சு சுமார் இரண்டரை மணிநேரம் நீடித்தது.

இதில் ஒஸ்லோ மாநாடு தமககு மகிழ்ச்சியளிப்பதாகவும், நாடுகள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் தமக்குத் திருப்தியளிப்பதாகவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அதேவேளை - புலிகள் வட-கிழக்குப் பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்களைத் திறந்து நிர்வாகம் நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி பலத்த எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் பொலிஸ் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்களை மூடுவதற்குத்தான் முப்படைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அத்துடன் அரசாங்கமும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து பிரதமர்- புலிகளின் நீதிமன்றங்களோ, பொலிஸ் நிலையங்களோ இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இயங்கிவருவதாகச் சுட்டிக்காட்டியதோடு, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அவை இயங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்களை இயங்குவது குறித்துதான் இதற்கு முன்னர் அறிந்திருக்கவில்லையென்றும், இலங்கையின் அரசியலமைப்பில் இரண்டு பொலிஸ், நீதிமன்றங்கள் இருப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை எனவும் கூறி, உடனடியாக இவற்றை மூடுவதற்கு ஜனாதிபதி, பிரதமரிடம் கேட்டுக் கொண்டதாகவும் தெரியவருகின்றது.

# 'சதொச' வின் முகாமைத்துவத்தில் 40 வீதம் தனியாருக்கு விற்பனை

## கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் தனது முகாமைத்துவத்தின் நாற்பது வீதத்தினை தனியார்மயப்படுத்த தீர்மானித்துள்ளது. இவ்வாறு முகாமைத்துவத்தினை தனியார் மயப்படுத்துவதற்கு அதன் முகாமைத்துவக் குறைபாடே காரணம் எனத் தெரியவருகின்றது.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் 1994இல் எழுநூற்றி ஏழு மில்லியன் ரூபாவை இலாபமாக உழைத்த போதும், மேற்படி ஸ்தாபனம், 2001இல் நானூற்றி ஐம்பத்தொரு மில்லியன் ரூபா நட்டம் அடைந்துள்ளது. அதேவேளை 2001ஆம் ஆண்டு வரை ஐந்நூற்றி தொன்னூற்றி இரண்டு மில்லியன் ரூபா கடன்பட்டுள்ளது.

நிறுவனத்தின் முகாமைத்துவக் குறைபாடே மேற்படி நிதியியல் நிலைக்குக் காரணம் எனவும் இதனாலேயே 40 சதவீத முகாமைப் பங்குகளை தனியாருக்கு விற்கத் தீர்மானிக்கப்பட்டு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## அரும்பொருட்களை முக்கியத்துவம் பற்றி மாணவரிடையே போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலை வட்டத்தினர் பாடசாலை மாணவர்களிடையே அரும்பொருட்களின் முக்கியத்துவம் தொடர்பான கட்டுரை, சுவரொட்டிப் போட்டி என்பவற்றை நடாத்தவுள்ளனர்.

இவை தொடர்பான விபரங்கள் அடங்கிய கடிதமொன்று ஒவ்வொரு பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளுக்கான முடிவு திகதி தைமாதம் முதலாம் திகதி எனவும், போட்டியில் தகுதிபெறும் படைப்புக்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் கலை வட்டம் அறிவித்துள்ளது.

## ஊனமுற்றோருக்கு அன்பளிப்பு

டிசம்பர் 3ஆம் திகதி நடைபெறவுள்ள ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு - பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின்போது, தெரிவு செய்யப்பட்ட இருவருக்கு முச்சக்கர வண்டியும், சக்கர நாற்காலியும் ஏனையவர்களுக்கு வேறு அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப் படவுள்ளது. (15)

## அரியாலையில் இலவச மருத்துவமுகாம்

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். அரிமாக்கழகம் நடாத்தும் இலவச மருத்துவமுகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1 மணிவரை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெறும்.

பொதுமருத்துவம், கண் பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்கல் முதலியன இச்சேவையின்போது இடம்பெறும்.

## உடுப்பிட்டி வீதியில் குழிகள்

(வல்வெட்டித்துறை)

ரெலிகொம் நிறுவனத்தினரால்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு முன்பாக வல்வெட்டித்துறை வீதியிலும், வதிரி வீதியிலும் வெட்டப்பட்ட கேபிள் இணைப்புக்கான குழி சரியான முறையில் மூடப்படாமையினால் அப்பாதையால் செல்லும் வியாபாரிகள் மற்றும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (19)

## அச்சுவேலியில் மாவீரர் நாள் நிகழ்வுகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் ஆகிய பகுதி வணிகர் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவீரர் தின நிகழ்வு அச்சுவேலி பஸ் நிலையத்தில் நடைபெற்றது.

வணிகர் கழகத் தலைவர் அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை திருமதி சிவக்கொழுந்து ஏற்றிவைத்தார். தேசியக்கொடியை விடுதலைப் புலிகளின் உறுப்பினர் கஜன் ஏற்றினார். ஈகச்சுடரை கப்டன் நிருபாவின் தந்தை ச.மகாதேவனும் மலர் வணக்கத்தை வீரவேங்கை திருமாலின் தந்தை செ.நடராசாவும் செலுத்தினர். (76)

## செவிப்புலன் வலுவற்றோருக்கு சுயதொழில் கடன்

(நெல்லியடி)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் தமது அங்கத்தவர்களுக்கு சுயதொழில் கடனுதவித் திட்டத்தின் கீழ் 3ஆவது சுற்றுக் கடனுதவிகளை வழங்கவுள்ளது. தலா 10 ஆயிரம் ரூபாப்படி 13 அங்கத்தவர்களுக்கு இந்தச் சுயதொழில் கடனுதவிகள் வழங்கப்பட இருக்கின்றன. (13)

## நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசைத் தினம் எதிர்வரும் 5ஆம் திகதி பி.ப.2 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஆறு திருமுருகன் விசேட சொற்பொழிவாற்றவுள்ளார்.

## சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணிக்கு விண்ணப்பிக்கலாம

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகம் - சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி கற்கைநெறி 2003/2004 கல்வியாண்டுக்கான புதிய அனுமதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களுடன் - இசற் புள்ளி அடங்கலாக பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றிருப்போர் இதற்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்ப முடிவு திகதி டிசம்பர் 16 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வண்ணார் பண்ணை அஞ்சலகம் இடமாற்றம்

(வண்ணார்பண்ணை)

இதுவரை காலமும் 200, சிவன் பண்ணை வீதியில் இயங்கி வந்த வண்ணார்பண்ணை அஞ்சல் அலுவலகம் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி தொடக்கம் இல. 40, நாவலர் வீதியிலுள்ள புதிய கட்டடத்திற்கு இடமாற்றப்படவுள்ளது.


இக்கட்டடம் நாவலர்வீதி - காங்கேசன்துறை வீதிச் சந்திக்கு அண்மையில் யாழ்.மாநகரசபை மகப்பேற்று நிலையத்திற்கு அண்மையில் உள்ளது எனவும், இது தொலைநகல், மற்றும் தொலைபேசி சேவை வசதிகளுடன் இயங்கவுள்ளது என வண்ணார் பண்ணை அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்.

## மின் தாக்கி இருவர் ஆஸ்பத்திரியில்

(கொழும்புத்துறை)

மின்கம்பம் பொருத்தும் போது தவறுதலாக இணைப்புக்கம்பி மின் கம்பியில் மோதியதால் மின் சாரம் தாக்கி இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலை யிலே அனுமதிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டு சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பையா மகிழநாதன் (வயது 28) ஊரெழு மேற்கை சேர்ந்த தர்மலிங்கம் யோகாணந்தம் (வயது 21) ஆகியோரே சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (60)



யா/மயிலிட்டி றோ.க. வித்தியாலய ஒளி விழா அண்மையில் நடைபெற்றபோது அதிபர் செ.அன்ரன், சிறப்பு விருந்தினர் அருட்தந்தை ஜெசுராசா அடிகளார், பிரதம விருந்தினரான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் ஆகியோரைப் படத்தில் காணலாம். (46)

# யாழ்.குடாநாட்டு புனரமைப்புப் பணிகளுக்கு யூ.என்.எச்.சி.ஆர். 30 கோடி ரூபா வழங்கும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் முன்னூறு மில்லியன் (30 கோடி) ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

யாழப்பாணத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காகவும், வீடமைப்பு உதவித்திட்டங்களுக்காகவும் மேற்படி நிதி உதவி பயன்படுத்தப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளபடவிருக்கும் மேற்படி செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்படி நிறுவனம் தற்போதிருந்தே கவனம் செலுத்தி வருகின்றது.

இச்செயற்திட்டங்களை பொருத்தமான அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினூடாகவோ அல்லது அரச நிர்வாக கட்டமைப்பின் ஊடாகவோ மேற்கொள்ளமுடியும். இவ் விடயம் குறித்து தற்போது பல நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

அரசசார் பற்ற நிறுவனங்களின் ஊடாக மேற்படி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை விட அரச நிர்வாக கட்டமைப்பின் மூலம் நடைமுறைப்படுத்துவது அதிகம் உசிதமானது என யு.என்.எச்.சி.ஆர். தரப்பில் கருதப்படுகிறது.

(க)

## சைவ பரிபாலன சபை நடத்தும்

# நாவலர் குருபூசை தினத்தில் போட்டியில் வென்றோருக்குப் பரிசுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவ பரிபாலன சபையினால் நடாத்தப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசைத்தினம் எதிர்வரும் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சைவபரிபாலன சபையால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் பரிசில்கள் பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

மேற்பிரிவில் - க.கலையரசி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), கு.குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி), பா.மகியினி (மகாஜனாக் கல்லூரி)

மத்திய பிரிவில் - க.கலையரசி (திரேசா மகளிர் கல்லூரி), ம.சுபாஷினி (பெரிய புலம் மகாவித்தியாலயம்), தெ.ஹர்சன் (மத்திய கல்லூரி)

கீழ்ப்பிரிவு - ப.டிலானி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), போ. கார்த்திகா (மகாஜனாக் கல்லூரி), க.விகர்ணன் (இணுவில் மத்திய கல்லூரி)

கட்டுரைப்போட்டியில் - பா.நர்மதா, கு.குருபரன், மு.ராதிகா ஆகியோர் பரிசில்கள் பெறவுள்ளனர்.

# புலிகளின் காவல் பணிமனை, நீதிமன்றங்கள்; ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இல்லை!

## - பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதி, பிரதமருக்கு அறிக்கை -

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் எவற்றிலும் விடுதலைப் புலிகள் தமது காவல்துறைப் பணிமனைகளையோ, நீதிமன்றங்களையோ அமைக்கவில்லை என பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா அறிவித்துள்ளார்.

அது பற்றிய விசாரணை அறிக்கையை - அவர்- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோருக்கும் அவர் அனுப்பிவைத்தார்.

பிரதமரின் பணிப்பின் பேரிலேயே- தான் இந்த விடயம் பற்றி ஆராய்ந்து, அறிக்கை சமர்த்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பருத்தித்துறை நகரசபைக்கு இரு உறுப்பினர்கள் பதவியேற்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபை வெற்றிடமாக இருந்த பதவிகளுக்கு இரு உறுப்பினர்கள் கடந்த வாரம் பதவியேற்றுள்ளனர்.

ரெலோ அமைப்பின் சார்பில் பா.உதயகுமார், புளொட் அமைப்பின் சார்பில் பா.கமலேஸ்வரன் ஆகியோர் பதவியேற்றுள்ளனர்.

இரு வெற்றிடத்தினையும் நிரப்புமாறு நகரசபை விடுத்த கோரிக்கையை அடுத்து இரு கட்சிகளின் சார்பாக இருவரையும் தேர்தல் திணைக்களம் அண்மையில் நியமித்திருந்தது.

ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட நகரசபையில், இன்னமும் ஈ.பி.டி.பி சார்பில் ஒரு வெற்றிடம் நிரப்பப்படாமல் இருந்து வருகின்றதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றன. (ச)

## பொலிஸ் நிலையத்தை தாக்கியதாக

# குற்றம் சாட்டப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் விடுதலை

(மட்டக்களப்பு )

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்முனை பொலிஸ் நிலையத்தைத் தாக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ் இளைஞர்களையும் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

தேவராஜா ரகுநாதன், கதிரவேல் தர்மலிங்கம் ஆகிய இரு இளைஞர்களும் 1993இல் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். கடந்த ஒன்பது வருடங்களாகச் சிறையில் இருந்த இவர்கள் மீது நீதிமன்றில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் மேற்படி தாக்குதல் சம்பவத்துடன் இந்த இளைஞர்கள் சம்பந்தப்பட்டதாக பொலிஸாரினால் நிரூபிக்க முடியாததால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் இருவரையும் விடுவிக்க உத்தரவிட்டுள்ளது.



புன்னாலைக் கட்டுவன் தெற்குப் பகுதியில் பாதீனியம் களை வேகமாகப் பரவி வருகின்றது. தற்போதைய பருவ மழைச் சூழலில் செழித்து வளர்ந்து காணப்படும் பாதீனியம் களைகளையே படத்தில் காண்கிறீர்கள்

### வல்வெட்டி விநாயகர் வித்தியாலய பரிசளிப்பு விழா

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் இன்று பி.ப.2.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சி.சிவச்செல்வம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமராட்சி வலய கல்வி நிர்வாக பிரதிப் பணிப்பாளர் வி.அருளானந்தம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

பருத்தித்துறை மின் அத்தியட்சர் த.செல்வச்சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி இ.அருளானந்தம் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ச)

### பரிசளிப்பு விழாவும் ஒளி விழாவும்

(புன்னாலைக்கட்டுவன்)

யா/சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு, பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர், செல்வி. றோ. அந்தோனிமுத்து தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவிற்கு முதன்மை விருந்தினராக அ.தற்பரானந்தன் கலந்து கொள்வதுடன், வண பிதா. பா.பி.இராஜசிங்கம் அடிகளாரும் ஆர்.ஜெயப்பிரகாசமும் சிறப்பு விருந்தினர்களாக் கலந்து கொள்ளவுள்ளனர்.

### மானிய அடிப்படையில் தென்னங்கன்று

(மீசாலை)

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால், மானிய அடிப்படையில் 2 தென்னம்பிள்ளைகள் வீதம் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும் பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார். (25)

# ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை புதுவை ஆரம்பித்துள்ளார்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, தனது ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

ஐரோப்பாவிற்கான தனது பயணத்தின் போது ஐரோப்பாவில் நிகழும் மாவீரர் நாள் தொடர் நிகழ்வுகளிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

இலண்டன், சுவிஸ், ஜேர்மனி ஆகிய இடங்களில் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாவீரர் நாள் நிகழ்வுகளில் புதுவை இரத்தினதுரை சிறப்புப் பேச்சாளராக கலந்து கொள்ளவுள்ளார்.

# நிமலராஜன் படுகொலை வழக்கைத் துரிதமாக்குக

## பொலிசாருக்கு உள்துறை அமைச்சர் உத்தரவு

(கொழும்பு நிருபர்)

ஊடகத்துறையினர் மீதான அச்சுறுத்தல்களை நீக்குவதற்குப் பொலிசார் உடனடியாக சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

'தினகர' பத்திரிகையின் சாரதி அச்சுறுத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக பொலிசாருக்கு விடுத்துள்ள பணிப்பிலேயே ஜோன் அமரதுங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நிமலராஜன், 'சட்டன' ஆசிரியர் றோகணகுமார ஆகியோரின் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளையும் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உள்துறை அமைச்சர் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : மு.அஜிராஜ்
முகவரி: கணேஸ்வரம், அளவெட்டி.

ஆறாவது அகவையில்.



பெயர் : க.டினோஸ்
முகவரி: கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.



பெயர் : ச.ஜெயச்சந்திரன்
முகவரி: கண்ணகை அம்மன் கோவில், வட்டுக்கோட்டை



பெயர் : பு.புவனியா
முகவரி: மீசாலை வடக்கு, மீசாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------------

முகவரி:-----------------------------------------

பிறந்த ஆண்டு:-----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:- இம்மாத முடிவு மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்.

# வார்த்தை விளையாட்டு – 09

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | ள் |
| | 4 | டை | | | |
| | | 5 | | ண | |
| | | | 6 | | தி |
| | 7 | | ர | | |
| 8 | | ல் | 9 | | |

முழுப் பெயர் : ......................................

கற்கும் பாடசாலை : ......................................

கற்கும் தரம் : ......................................

முகவரி : ......................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. இதைக்கண்டால் படையும் நடுங்கும் (*விஷமுடையது*)
3. பூரான் என்றும் சொல்லப்படும்.
4. இறுதி எனப் பொருள்.
5. வீடுகளில் காற்றோட்டத்துக்காக வைத்துக் கட்டப்படும்.
6. நீதிக்கு எதிர்ப்பதம்.
7. ஆங்கிலத்தில் சித்திரை மாதம்.
8. குரங்குகளுடன் இதுவும் இராமருக்கு பாலம் அமைக்க உதவியது. (மரத்துக்கு மரம் தாவும் உயிரினம்)
9. தலை.

### மேலிருந்து கீழ்

1. மகாபாரதத்தில் வரும் ஐவர்.
2. பாம்பு வகைகளில் ஒன்று.
3. தேன் சேகரிக்கும் சிறு பூச்சிவகை.
6. அரசனின் மனைவி.
7. மேலே ஏற்றி விடுவதற்கு உதவும்.

## *வார்த்தை விளையாட்டு - 8 இன் விடைகள்*

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. வேம்பு | 7. கங்காரு | 2. புடலங்காய் | 7. கடுகு |
| 2. மாதா | 8. காடு | 4. தாமரை | 8. காந்தம் |
| 5. கடகம் | 9. காகிதம் | 6. மருதம் | |
| 6. மரை | 10. அம்பு | | |

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 04-12-2002
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 08


இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**செல்வி.வினோஜா கெங்காதரன்**
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

*2ஆம் பரிசு -*
**செல்வி.சங்கீத்தா தர்மேஸ்வரன்**
மட்டுவில் தெற்கு,
வாகையடி வீதி,
சாவகச்சேரி.


*3ஆம் பரிசு -*
**செல்வி.ரதிப்பிரியா ஜெகதீஸ்வரன்**
உபதபாலகம்,
உருத்திரபுரம்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## பொய் சொல்ல மாட்டேன்!



கடலூர் எனும் கிராமத்தில் வைதேகி எனும் பெண்மணி இருந்தாள். அவளுடைய கணவர் இறந்து விட்டார். அவளுக்கு ஒரே ஒரு மகன்தான் இருந்தான். அவனது பெயர் கந்தன். அவனை வைதேகி கஷ்டப்பட்டு வளர்த்தாள். அவன் வாலிபனானதும் வேலை தேடிப் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டான். அவன், ஒருநாள் இரவுநேரந்தான் புறப்பட்டான். அவன் ஒரு காட்டுப்பாதையூடாகச் சென்று கொண்டிருந்தான். அப்போது ஒரு கள்வன் அவனை வழிமறித்து "நீ எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான். அப்போது கந்தன் "என்னிடம் இருநூறு ரூபாய் உள்ளது" என்று கூறினான். அதைக் கேட்ட கள்வன் அவன் சொன்னதை நம்பாது "எங்கே காட்டு பார்ப்போம்" என்றான். கந்தன் தன்னிடமிருந்த இருநூறு ரூபாவைக் கள்வனுக்குக் காட்டினான். உடனே கள்வன் "ஏன்? நீ உண்மை கூறினாய்" என்று கேட்டான். அதற்குக் கந்தன் "கடவுளும் தாயும் பொய் சொல்லக் கூடாது என்று கூறியுள்ளனர்" என்று கூறினான். அதைக் கேட்ட கள்வன் "நீ என்னை நல்லவனாக்கி விட்டாய். நீயோ உண்மை கூறுகின்றாய். நான் களவு செய்கிறேன். நீ இப்போது என்னை நல்லவனாக்கி விட்டாய்" என்று கூறிவிட்டு தன்வழி நோக்கி நடந்தான். கந்தனும் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.



## அன்புச் சிறார்களே!

**உங்கள் ஆக்கங்களையும் சிறுவர் அரங்கம் பிரசுரிக்கத் தயாராக இருக்கிறது. கதைகள்,கட்டுரைகள், கவிதைகள் மற்றும் ஓவியங்கள் போன்ற உங்கள் படைப்புக்களை எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

## காக்கையின் மூளை


தமிழில்- தி.தவபாலன்
நன்றி - ரிங்கிள்




## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுபபெயர் :-
பிறேமகுமார் நமசிவாயம்
கற்கும் பாடசாலை :-
யா/சென் ஜோன்ஸ் கல்லூரி.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, பத்திரிகை வாசித்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.




முழுப்பெயர் :-
பாஸ்கரன் தனதன்
கற்கும் பாடசாலை :-
யா/ மகாஜனக்கல்லூரி.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம், பத்திரிகைபடித்தல், விஞ்ஞான விடயங்களை அறிதல்.



முழுப்பெயர்:-
பைரவி பாலசுந்தரம்
கற்கும் பாடசாலை :-
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
T.V. பார்த்தல், ஆங்கிலம்.



முழுப்பெயர்:-
தணிகா தயாநிதி
கற்கும் பாடசாலை :-
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், விளையாட்டு, முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :-
சண்முகசுந்தரம் சிஜாமனன்
கற்கும் பாடசாலை :-
யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலம்.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
T.V.பார்த்தல், பத்திரகை வாசித்தல், பொது அறிவை வளர்த்தல்.

முழுப்பெயர்:- வைணவி சிவராஜா
கற்கும் பாடசாலை :- யா/ வேம்படி மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
T.V.பார்த்தல், கதைபடித்தல், பாடங்களைப் படித்தல்.

முழுப்பெயர் :- கந்தசாமி சுதாகரன்
கற்கும் பாடசாலை :- யா/கரணவாய் மகா வித்தியாலம்.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- கணிதம், விஞ்ஞானம்.

முழுப்பெயர்:- கிரிஷா செல்வத்திரவியம்
கற்கும் பாடசாலை :- யா/ யூனியன் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், சித்திரம், பத்திரிகை வாசித்தல், பேனா நட்பு.

## ஒலிம்பிக்




2004 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கான உத்தியோகபூர்வ சின்னம்

உலகின் அனைத்து நாடுகளையும் உள்ளடக்கியதாக, 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் பிரபலமும் மதிப்பும் வாய்ந்த ஓர் விளையாட்டுப்போட்டியே ஒலிம்பிக்காகும்.

கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் கிரேக்கத்தின் (கிரீஸ்) ஒலிம்பியா பள் ளத்தாக்கில் நடந்து வந்த ஒலிம்பிக் பின்னர், பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டது.

நவீன ஒலிம்பிக் போட்டிகள் பியரே கூபர்டின் எனும் பிரான்ஸ் நாட்டவரின் முயற்சியால் முதன்முதலாக 1896 இல் கிரீஸ் நாட்டின் எதென்ஸ் நகரில் நடைபெற்றன.

ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த நிறுவனமாக சர்வதேச ஒலிம்பிக் குழு ஸ்தாபிக்கப்பட்டது. இது நவீன ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு முன்னோடியாக 1894 இல் அமைக்கப்பட்டது.

போட்டிகளில் ஒலிம்பிக் கொடியேற்றும் வழக்கம் 1920ஆம் ஆண்டில்தான் ஆரம்பமானது. கொடியில் இடம்பெறும் ஒலிம்பிக் சின்னம், 5 வளையங்கள் ஒன்றுடன் ஒன்று கோர்த்தது போல் இருக்கும். இது உலகின் 5 கண்டங்களும் ஒற்றுமையாகப் போட்டியில் பங்குபற்றுவதைக் குறிக்கும். ஒவ்வொரு வளையமும் நீலம், மஞ்சள், பச்சை, கறுப்பு, சிவப்பு என வெவ்வேறு நிறங்களில் உள்ளன. உலக நாடுகளில் தேசியக் கொடிகள் யாவும் இந்த நிறங்களில் ஏதாவது ஒன்றில் இருப்பதை காணலாம்.



எதென்ஸில் போட்டிகள் நடைபெறவுள்ள அரங்குகளில் ஒன்று.

1928ஆம் ஆண்டில்தான் ஒலிம்பிக் போட்டிகளில் முதன்முதலாக பெண்கள் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டனர்.

இவ் ஆண்டில்தான் ஒலிம்பிக் தீபமேற்றும் வழக்கமும் ஆரம்பமானது. பாரம்பரிய முறைப் படி ஒலிம்பியா பள்ளத்தாக்கில் வைத்து சூரிய ஒளியில் பந்தம் ஏற்றப்பட்டு தொடர் ஓட்டக்காரர் மூலம் போட்டி நடைபெறும் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

ஒலிம்பிக் கிராமம் அமைக்கும்முறை 1932 இல் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் வைத்தே அறிமுகம் செய்யப்பட்டது.

1936இல் தொலைக்காட்சி மூலம் முதலாவதாக ஜேர்மனியின் பெர்லின் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டி ஒளிபரப்பப்பட்டது.

இதுவரை ஆசியாக் கண்டத்தில் இரு தடவைகள் மாத்திரமே ஒலிம்பிக் போட்டிகள் நடந்துள்ளன. 1964 இல் ஜப்பானின் ரோக்கியோவிலும் 1988 இல் தென்கொரியாவின் சியோல் நகரிலும் இவை நடைபெற்றன.

இதுவரை ஆபிரிக்கா நாடுகளில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறாதது குறிப்பிடத்தக்கது. 1996இல் நவீன ஒலிம்பிக்கின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் அமெரிக்காவின் அற்லான்ரா நகரில் நடைபெற்றன.




2004 ஒலிம்பிக்கின் உத்தியோக பூர்வ உருவங்கள்.

2000ஆம் ஆண்டில், பெண் வீராங்கனை ஒருவரால் ஒலிம்பிக் தீபம் 3 கி.மீ. தூரம் நீருக்குக் கீழாகக் கொண்டுசெல்லப்பட்டு ஏற்றப்பட்டது. இப்போட்டிகள் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்றன. ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக 1948 இல் டங்கன் வைற் 400அ தடைதாண்டலில் வெள்ளிப் பதக்கத்தையும், 2000 ஆம் ஆண்டில் சுசந்திகா ஜயசிங்க 200அ குறுந்தூர ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்தனர். 28 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் 2004 இல் கிரேக்கத்தின் எதென்ஸ் நகரில் நடைபெற உள்ளன. தொடரின் 29 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் 2008 ஆம் ஆண்டில் சீனாவில் நடைபெற உள்ளன.

*- P.உமாசங்கர்.*

## உலகில் சிறந்தது எது?

"உலகில் சிறந்தது எது?" வென
ஊரில் இருவர் மண்டையை
உடைத்துக் கொண்ட போதிலும்
ஒன்றும் புரியவில்லையே!

மெத்தப்படித்த ஒருவரை
மேலும் நாடிச் சென்றனர்;
"உலகில் சிறந்தது எது வென
உரைப்பீர்?" என்றே வினவினர்.

மெத்தப்படித்த அவருமே
மீசை தன்னை முறுக்கினார்!
புத்தகங்கள் யாவையும்
புரட்டிப் புரட்டிப் பார்த்தார்!

"உலகில் சிறந்தது எது?" வெனும்
உண்மை விளங்கவில்லையே!
அலசி அலசிப் பார்த்துமே
அடையவில்லை விடையினை!

வந்த இரண்டு பேருமே
வாடிச் சோர்ந்த போதிலே
அங்கு குமரன் வந்தனன்;
அருமைத் தந்தை அருகிலே!

அன்பு உலகில் சிறந்தது;
அறிவு உலகில் சிறந்தது;
பண்பு உலகில் சிறந்தது;
பாரில் உழைப்பு சிறந்தது!

என்ற சிறுவன் விடையிலே
இன்பம் கொண்ட இருவரும்
அந்தச் சிறுவன் தன்னையே
அள்ளி அணைத்துக் கொண்டனர்.

*பிரணவி சிவதாஸ்*
*தரம் - 6c*
*யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.*

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உங்கள் கைவண்ணம்



செ.சித்தார்த்தன்,
தரம் - 10 C,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பொது அறிவு

1) மறதியுள்ள பறவை காகம்.
2) உலகின் மிகப் பெரிய பறவை தீக்கோழி.
3) எல்லாச்சத்துக்களும் நிறைந்த புல் அறுகம்புல்
4) தற்பொழுது இலங்கையில் அதிகமாக பரவும் நோய் டெங்கு.
5) ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப் படுத்தப்பட்ட சர்வதேச மகளிர்தினம் மார்ச் 08.

*தொகுப்பு:-*
*ஜெ.ஜொய்சியா, தரம் - 7,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

## வளராது

வானில்லை என்றால் நிலவது தோன்றாது
நீரில்லை என்றால் மீனது நீந்தாது
மழையில்லை என்றால் புவியது சிரிக்காது
ஒற்றுமை இல்லை என்றால் நாடது வளராது.

ஆக்கம்: ஜெ.றதிப்பிரியா, தரம்-6A
கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

..................
திகதி

..............................
ஒப்பம்

..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம்

..............................
பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பலவீனம் எம்மை நோக்கி நகரமுன்*
*நாம் பலத்தை நோக்கி நகர வேண்டும்.*
*அப்பொழுதுதான் எதிரியும் எம்மை மதிப்பான்.*
*- நெப்போலியன் போனபாட்*

# நமது நோக்கு

## பலமும் கௌரவமும் !

தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரையை வரவேற்றுள்ள அரசாங்கத்தரப்பு- அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் உதவிகரமானதும் ஊக்கந்தருவதுமாக அமைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தரப்பின் இத்தகைய நிலைப்பாடானது சமாதானத்தின் வழியை நம்பிக்கை தருவதாக்கியிருப்பதோடு,

கடந்த காலங்களில் சிங்கள அரசாங்கங்கள் கொண்டிருந்த, தமிழர் பிரச்சனை பற்றிய நோக்கிலிருந்து வேறுபட்டதாக - ரணில் அரசாங்கம் பிரச்சினையைக் கையாள விரும்புவதையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

பிரபாகரன் தெரிவித்திருந்ததற்கும், எமது கருத்துக்களுக்கும் இடையே அடிப்படையில் வேறுபாடு இல்லை என அமைச்சர் பீரிஸ் கூறியிருப்பது- அரசியல் தீர்வு பற்றிய இனிவரும் கலந்துரையாடல்களுக்கும், ஆராய்வுகளுக்கும், நல்லதொரு அடித்தளமாக அமையமுடியும்.

அதேவேளை - ஆராக்கியமானதொரு ஆரம்பமாக கலந்தாலோசனைகள் அமைவதற்கும் அமைச்சர் பீரிஸின் கருத்துக்கள் சமிக்ஞையாகவும் கருதப்படலாம்.

அதேவேளை, தலைவரின் சுயாட்சி பற்றியும் சுயநிர்ணயம் தொடர்பானதுமான தீர்வு யோசனையின் ஆழமான பரிமாணங்கள் பற்றிய - கருத்துவெளிப்பாடாக, அமைச்சர் பீரிஸ் கூறுபவற்றை எடுத்துக் கொள்ளவும் முடியாது என்பதைக் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

ஆனாலும்- அரசியல் தீர்வு பற்றிய கட்டங் கட்டமான பேச்சுக்களையும், அதனது வளர்ச்சிப் படிநிலைகளையும் குறிப்பிட்ட தளத்திலிருந்து முன்னெடுத்துச் செல்வதற்கு, அரசாங்கத்தரப்புத் தயாராக இருப்பதை அமைச்சர் பீரிஸின் அறிவிப்பு இனங்காட்டியிருக்கிறது.

உண்மையில் - விடுதலைப்புலிகள் காலங் காலமாக வலியுறுத்தி வந்த சமாதான அழைப்புக்களின்போது - தெளிவாக முன்வைக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உரிமைகளே - இன்றும் தேசியத் தலைவரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை என்ற மாறாத மூலக்கோட்பாடுகளின் அடிப்படையிலான சுயாட்சியையே விடுதலைப் புலிகள் திம்பு முதலாகக் கோரிவந்தனர்.

ஆனால் அன்றைய நிலையில் - அக்கோரிக்கையை ஏற்காத அரசாங்கம் - இன்று அதனை தாமும் கொண்டுள்ள கோட்பாடு எனப் பாராட்டுவதானது, வெறுமனே காலமாற்றத்தால் மட்டும் வந்து விடவில்லை.

திம்புப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், வீறுகொண்டெழுந்த தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் - இன்று தன்னிகரற்ற தலைவனையும், தமிழருக்கான தனிப்பெரும் படையையும், கொண்டுள்ளதோடு மட்டுமல்லாது, விடுதலைப்புலிகளின் பேரம் பேசும் வல்லமையையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்து நிற்கின்றது.

தமிழர் தரப்பின் இந்தப் பலமான நிலையே - தமிழருக்கான ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் உருவாகியிருக்கிறது.

இந்தவகையில் - தலைவர் பிரபாகரன் தனது மாவீரர்தின செய்தியில் குறிப்பிடுவதைப்போல - 'போரிற் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதனைச் சிங்களதேசமும் உலகமும் உணர்ந்து கொண்டன. இந்தச் சூழ்நிலைதான் போராட்ட வல்லமையை நிரூபித்துக் காட்டி, எமக்குச் சாதகமான இராணுவச் சமநிலையில் நின்றபடியே நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்தோம்' என்பதாக -

தமிழர்கள் பலமுடன் இருக்கும் நிலையில்தான், அரசியல் ரீதியான இலக்குகளை எய்த முடியும் என்ற தலைவரின் தீர்க்கதரிசனம் இன்று பலித்து வருவதைக் காணமுடிகின்றது.


தமிழர்கள் கொண்டுள்ள அத்தகைய பலமும், படையணிகளுமே - அரசாங்கம் முதல் சர்வதேசம் வரை எம்மை இன்று அங்கீகரித்துள்ளமைக்கும் தமிழர்களின் பிரச்சினைகளை நியாயத்தின் பேரில் தீர்க்க முன்வந்தமைக்குமான அடிப்படைக் காரணமுமாகும்.

# டிசம்பர் 4 ஆம் திகதி நள்ளிரவுடன் நாடாளுமன்றம் கலைக்கப்படும்

## அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

டிசம்பர் 4ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் - எந்த நேரத்திலும் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று பொ.ஐ.மு.நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். ஹைட் பார்க்கில் நடந்த அரச எதிர்ப்புக் கண்டனக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



டிசம்பர் 4ஆம் திகதி நள்ளிரவுடன் தற்போதைய நாடாளுமன்றம் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்கின்றது. ஒரு வருடத்தின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. இதனால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய அரசாங்கத்தை அமைக்க பொதுஜன ஐக்கிய முன்னணி தனது புதிய கூட்டாளியான ஜே.வி.பி.யுடன் ஆலோசனைகளை மேற்கொண்டு வரு கின்றது.

டிசம்பர் 4ஆம் திகதி நள்ளிரவிலேயே தற்போதைய அரசின் தலைவிதி தீர்மானிக்கப்பட்டுவிடும். தற்போதைய நாடாளுமன்றத்தை முதிர்வு காலம் வரை கலைக்கமாட்டேன் என ஜனாதிபதி,சபாநாயகருக்கு உறுதியளித்திருந்தார்.

ஆனால் அரசாங்கம் நேர்மையாக நடக்காததால் கலைத்துவிடத் தீர்மானித்துள்ளார் எனவும் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இவரையடுத்து கூட்டத்தில் உரை நிகழ்த்திய பொ.ஐ.மு. பிரமுகர் டி.எம்.ஜெயரட்ண - ஜனாதிபதி டிசம்பர் 4ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவார் என அனுரா பண்டாரநாயக்க பேசியது அவரது தனிப்பட்ட கருத்து என்றும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடு அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

## ஒஸ்லோவில் பெற்ற நிதியுதவி தமிழீழத்தைக் கட்டியெழுப்பவாம்!

### -குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.-

(கொழும்பு)

ஒஸ்லோவில் அரசாங்கமும் புலிகளும் இணைந்து கோரிப்பெற்ற நிதியுதவிகள், தமிழீழத்தைக் கட்டியெழுப்பவே பயன்படுத்தப்படவுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒஸ்லோவில், வடகிழக்குப் பகுதிகளை மட்டுமே அபிவிருத்தி செய்வதற்கு நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. மேற்கு நாடுகளும் புலிகளின் தேவைகளை நிறைவு செய்து கொடுக்கவே புலிகளையும் இம்மாநாட்டில் பங்கேற்க வைத்திருந்தன.

இலங்கைக்கு எதிராக வெளிநாடுகள் திரளத்தொடங்கியிருப்பதையே இது காட்டுகிறது என மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "உதவியும் ஊக்கப்படுத்துவதும்" பிரபா உரை பற்றி பீரிஸ் விபரிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடைய மாவீரர் தின உரை 'உதவிகரமானதும், ஊக்கப்படுத்துவதுமாகும்' என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் விபரித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைக் கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கும்போது,

பிரபாகரன் குறிப்பிட்ட சகல விடயங்களையும் நாம் ஏற்கிறோம் என்று கூறிவிட முடியாது. அவரது உரையிலும் வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் வேறுபாடுக ளைக் குறைப்பதே தற்போதைய இலக்காக இருக்கின்றது.

அமைதி முயற்சிகள் தோல்வி கண்டாலும், சுயநிர்ணயத்துடன் கூடிய தீர்வு முயற்சிகள் மறுக்கப்பட்டாலும் மீண்டும் போராடுவதைத் தவிர வேறுவழியில்லை எனப் பிரபாகரன் கூறியுள்ளமை கொள்கை ரீதியானதேயாகும். ஆனால் அப்படியானதொரு நிலை தோன்றாது என அமைச்சர் பீரிஸ் மேலும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**விலைமதிப்பீட்டுத் திணைக்களங்கள்**

## வவுனியா மன்னார் அலுவலகங்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இயங்கும்

வவுனியா, மன்னார் மாவட்ட விலைமதிப்பீட்டுத் திணைக்களங்கள் இம்மாதம் முதல் யாழ்.மாவட்ட விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் கீழ் இயங்கவுள்ளது.

கடந்த 10 வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கையால் ஏனைய மாவட்டங்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு இருந்தது. இதனால் இத்திணைக்களங்களின் நடவடிக்கைகளை குருநாகல் மாவட்ட விலைமதிப்பீட்டுத் திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலைகளால் கண்டிவீதி திறக்கப்பட்டதை அடுத்து மீளவும் யாழ்.மாவட்ட விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் கீழ் அவை கொண்டுவரப்பட்டுள்ளது. (ச)

**மட்டுவில் -நுணாவில் வீதியில்**

## வீதியிலுள்ள குழி மூடப்படாததால் 3 மைல் சுற்றவேண்டிய பயணிகள்

(சரசாலை)


தென்மராட்சியில் யுத்த அனர்த்தங்களின்போது- நுணாவில் வைரவர் கோவிலடியில் இருந்து, மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் வீதியில் விமானக குண்டுவீச்சின்போது ஏற்பட்ட குழி மூடப்படாமல் உள்ள தால் இப்பாதையூடாகப் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர், இக்குழிக்கு அண்மையில் உள்ள காணியொன்றின் ஊடாகப் பயணம் செய்து வந்தனர். கடந்த வாரம் காணியைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டதால் - மக்கள் மூன்று மைல் தூரம் சுற்றியே பயணிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (34)

## புலிகளின் நீதிமன்றங்களுக்கு மாற்றீடான முறைகள் குறித்து அரசாங்கம் ஆராய்வு!

### அமைச்சர் மிலிந்த மொரகொட அறிவிப்பு

(கொழும்பு)



வட-கிழக்கில் புலிகளின் நீதிமன்றங்கள் திறக்கப்படுவதையோ, இயங்குவதையோ தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அரச தரப்புக் குழுவில் முக்கியமானவராக உள்ள அமைச்சர் மிலிந்த மொரகொட மேலும் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

நிலைமை எவ்வாறு இருந்தாலும் புலிகளின் நீதித்துறை குறித்து ஒரு சட்ட அமைப்புக்கூடாகவே நாம் அணுகு வோம். இது குறித்து புலிகளுடன் பேசுவது பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதற்கு மாற்றீடான முறைகள் என்ன என்பது குறித்து அரசாங்கம் தீவிரமாகச் சிந்தித்து வருவதாகவும் அமைச்சர் மிலிந்த மொரகொட மேலும் தெரிவித்துள் ளார்.



# குறைதீர் மன்றம்

அண்மைக்காலத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, தென்மராட்சியில் மீள்குடியமர்ந்த மக்கள் எல்லோருக்கும் பாகுபாடு இன்றி நஷ்டஈடு கட்டாயம் வழங்கப்படும் என பத்திரிகைகள் மூலமாக அறிந்தோம். திடீரென 'உ' அட்டை வைத்திருப்போருக்கு மாத்திரம் நஷ்டஈடு வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் அறிந்துள்ளோம். எனவே தங்களது குறைதீர் மன்றம் மூலம் எங்களுக்கு உதவுவீர்களா?


ரி.வசந்தன்,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

**நமது ஈழநாடு :-**

தங்களது விடயம் தொடர்பாக மாவட்டச் செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது - நஷ்டஈடு தொடர்பாக 'அ' அட்டை வைத்திருப்போர் 'உ' அட்டை வைத்திருப்போர் என எவ்வித பாகுபாடும் காட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. 'உ' அட்டை வைத்திருக்கும் உத்தியோகத்தர்கள் தத்தமது திணைக்களங்கள் மூலமாக விண்ணப்பங்களை புனர்வாழ்வு அமைப்பிற்கு அனுப்பலாம். **RRAN** அமைப்பு வடக்கிற்கான திணைக்களமாக உருவாக்கப்பட்டதும், நஷ்டஈட்டிற்கான நிதி கிடைத்ததும் விண்ணப்பதாரிகளுக்கான நஷ்டஈடுகள் நிச்சயமாகக் கிடைக்கும். எனவே போரினால் பாதிப்படைந்த 'உ' அட்டை வைத்திருப்போர் அனைவரும் நஷ்டஈட்டிற்கு விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

# பிராந்தியச் செல்வாக்கு அமெரிக்காவிடம் பறி போகிறதா? சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் தடைக்கற்கள்!

இலங்கையின் நீண்டகால இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் பெருமெடுப்பில் உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் அரங்கேறி வருகின்றது. பேச்சுவார்த்தை மட்டுமல்ல போருக்குப் பிந்திய நாட்டின் அபிவிருத்திக்கான உதவியும் ஒத்துழைப்



நெருக்கம் குறைந்து விட்டதா...?

பும் பெருகிவருகின்றன. ரணில் விக்கிரமசிங்க அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து கூட்டாக முன்வைத்த நிதியுதவிக்கான கோரிக்கையினை உலக நாடுகள் அங்கீகரித்து வருவதுடன், சமாதானத்துக்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்வதில் அக்கறை செலுத்தி வருகின்றன. ஆனால் உலக நாடுகள் பல உதவியும், ஒத்துழைப்பும் வழங்கி வரும்போதும் இந்தியா மௌனமாக அல்லது சில வேளைகளில் சாதாரண அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி விட்டு தப்பிக்கொள்கின்றது போல் தெரிகின்றது. அது உண்மையானதுதானா? என்பதே இன்றைய கேள்வியாகும். இங்கு - இலங்கையின் இனப்பூசல்களுக்கான சமாதான முயற்சியில் இந்தியாவின் நிலைப்பாடு எதுவாக உள்ளது என்பதனைப் பரிசீலிப்போம்.

பனிப்போர் முடிந்தபோது ஏற்பட்ட உலக ஒழுங்கில் அமெரிக்கா - இந்திய நெருக்கம் அதிகரித்துக் கொண்டது. குறிப்பாக வில்லியம் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக விளங்கியபோது, இரண்டு அரசுகளுக்குமான உறவு சுமுகமானதாக காணப்பட்டது. ஜனநாயகக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையின் போக்கும் அமெரிக்காவின் நீண்ட தூர நோக்கும் கிளின்டனின் அணுகுமுறையைத் தீர்மானித்திருந்தது. இதனால், அமெரிக்கா, இந்தியா பக்கம் நெருங்கியதைவிட இந்தியா - அமெரிக்கா பக்கம் அதிகமான நெருக்கத்தினை வெளிப்படுத்தியது. ஆனால் அத்தகைய நெருக்கம் அல்லது ஆபத்தில்லா உறவு என அமெரிக்கா கருதியபோது - இந்தியா திடீரென அணுவாயுதப் பரிசோதனையை வெற்றிகரமானதாக முடித்தது. சமகாலத்தில் கிளின்டன் ஆட்சி முடிவுக்கு வந்து, வில்லியம் புஷ்ஷின் குடியரசுக்கட்சி பதவியை ஏற்றுக்கொண்டது. அதன் வெளிநாட்டுக் கொள்கையும் மாற்றத்தினை நோக்கி நகர்ந்தது. இந்தியாவை ஆபத்துமிகக நண்பனாக நோக்கும் உணர்வு அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. அதற்காகப் பாகிஸ்தானை தனது அணியில் வளைத்துப் போட்டுக் கொண்டது. அதனாலேயே நவாப் ஷெரீப்பின் ஆட்சிக்குப் பதிலாக முஷராப்பின் ஆட்சியை மறைமுகமாக ஆதரித்தது.

அதுமட்டுமன்றி ஆப்கானிஸ்தான யுத்தம் மேலும் அமெரிக்க - பாகிஸ்தானிய நெருக்கத்தினை சாதகமாக்கியது. ஆனால் இந்தியாவை ஆபத்துக்குரிய அரசாக நோக்கும் உணர்வு மேலும் அமெரிக்காவுக்கு அதிகரித்தது.

குறிப்பாக வர்த்தக உறவுகளை இந்தியா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியமை, அமெரிக்கச் சந்தை நிலையமாக இந்தியாவை முழுமையாக பயன்படுத்த அனுமதியளிக்காமை, ஏவுகணை மற்றும் விண்வெளித் தொழில் நுட்பத்தில் முன்னேறி வருகின்றமை எனப் பல விடயங்களில் இந்தியா செயற்படுவதனை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது.

அதாவது அமெரிக்காவின் பொருளாதார, இராணுவ, அரசியல் விஸ்தரிப்புகளுக்கு நெருக்கடி இந்தியாவினாலும் ஏற்படுமென அமெரிக்கா கருதியது. அதனால் பாகிஸ்தானை ஒரு பக்கம் தூண்டிவிட்டு, இந்தியாவைப் பாதிக்க அமெரிக்கா முயன்றது.

இத தகைய திட்டமிடலைப் பாகிஸ்தான் போன்று உடனடியாக இலங்கையில் ஏற்படுத்திக்கொள்ள முடியாதநிலை காணப்பட்டது. அதாவது இலங்கை, ஜனநாயக பாரம்பரியத்தினூடாக ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய அரசாக விளங்கியது மட்டுமன்றி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி அமைந்திருந்தது. மேலும் விடுதலைப் புலிகள் வட-கிழக்குப் பகுதியில் பலமான சக்திகளாக விளங்கினர்.

இதனால் இலங்கை ஆட்சிமாற்றம் சாத்தியப்படுவதுடன் அமைதிச் சூழல் ஏற்படுவதும் அவசியமானதாக இருந்தது. அப்போது இந்திய எதிர்ப்பு உணர்வு இலகுவாக இப்பிராந்திய பலத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அமெரிக்கர்களின் நோககமாக அமைந்திருந்தது. ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் விரிசல் அதிகமுண்டு என்பதுடன், ஐக்கிய தேசிய கட்சி இந்திய எதிர்ப்பு வாதத்தை வெளிப்படுத்துவதுடன் மேற்கின் விசுவாசத்தை பாதுகாக்கும் கட்சி என்ற வகையிலேயே இலங்கையை அமெரிக்கா கையாளத் தொடங்கியது.

இதனை உணர்ந்து கொள்ளும் நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டதோ அல்லது இல்லையோ என்பதனை விட, இலங்கையின் சமாதானம் இந்தியாவுக்கு விருப்பமற்றதொன்றாகவே அமைந்திருப்பதாகத் தெரிவதாக அவதானிகள் கூறுகின்றனர். இதுவே இன்று தென்னிலங்கையின் முக்கிய பேச்சாகவும் உள்ளது. ஏனெனில் தனக்கு அப்பாற்பட்ட நிலையில் இந்தியாவுக்கு சாதகமற்றோர் ஒன்றுசேர்ந்து உருவாக்குகின்ற சமாதானம் இந்தியாவுக்கு விருப்பமற்றதாக உள்ளது. இதனை விளங்கிக்கொள்ள இன்னோர் சம்பவத்தினை நோக்குவோம்.

கட்டுநாயக்க விமான நிலையம் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்ட போது, அமெரிக்காவும், இந்தியாவும் போட்டி போட்டுக்கொண்டு களத்தில் இறங்கின. அமெரிக்கா, ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கத்திற்கு, உடனடியாக வட-கிழக்கில் நிகழ்த்தப்படும் விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படுதல் வேண்டும் என்று ஓர் எச்சரிக்கை விடுத்தது. ஆனால், இந்தியா விடுதலைப் புலிகளை கண்டிக்காமல் மௌனம் சாதித்தது டன் மறைமுகமாக விடுதலைப் புலிகளை ஆதரிப்பது போன்று காட்டிக் கொண்டது. ஒருவகையில் இரண்டு அரசுகளுமே விடுதலைப்புலிகளை ஆதரிப்பதன் வாயிலாக புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த விரும்பியதுடன், ஜனாதிபதி சந்திரிகா அரசையும் அதன் போக்கையும் கண்டிப்பது போன்று அமைந்திருந்தன. ஆனால் ஏலவே நோர்வேயின் முயற்சியினால் இலங்கை விடயத்தில் நுழைந்துகொண்ட அமெரிக்கா களத்தில் வெற்றிபெற, ஏற்கனவே தனது அணுகுமுறையால் அவப்பெயரைப் பெற்ற இந்தியா தோல்வியுடன் பின் வாங்கியது.

அப்போது பின்வாங்கிய இந்தியா படிப்படியாக முன்னேற ஆரம்பித்தது. அதற்காக இலங்கையிலிருந்து நானகு சக்திகளை இனங்கண்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் முழுமையாக இல்லாதபோதும் பகுதியாகவேனும் சமாதானத்தின் மீது நம்பிக்கை அற்றவர்கள் அல்லது சமாதானம் மலர்ந்தால் அரசியலே அஸ்தமனமாகி விடும் என்று கருதுபவர்களாக இருந்த சக்திகளாகும்.

முதலாவது பிரிவு - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான கதிர்காமர் ஆகியோராவர். கதிர்காமரைப் போன்று தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இந்தியா செல்கிறார். ஆனால் கதிர்காமர் மந்திர ஆலோசனை நிகழ்த்தச் செல்கிறார். ர்ணில் இந்தியர்களைத் திருப்திப்படுத்தச் செல்கிறார். ரணில், இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அமெரிக்காவில் வைத்து தாய்லாந்து பேச்சுக்கள் பற்றி விளக்கமளித்த சம்பவம் அவரது ராஜதந்திரத்தினைக் காட்டுகின்ற செயலாகவுள்ளது.

இரண்டாவது சக்தி ஜனதா விமுக்திப் பெரமுன என அழைக்கப்படும் ஜே.வி.பி. இதனை மீண்டும் வளர்ப்பதில் அதிக கவனம் இந்தியா செலுத்த ஆரம்பித்துள்ளது. 1989 இல் பிறேமதாஸ அரசாங்கம் ஜே.வி.பி. இன் தலைமையை அழித்த போது தப்பியோடித் தஞ்சமடைந்திருந்த சோமவன்சவை இந்தியா பாதுகாத்து வைத்திருந்தமை நினைவு கூரத்தக்க அம்சமாகும்.

1971இல் ஜே.வி.பியின் கிளர்ச்சியை அடக்க வந்த இந்தியா, சோமவன்சவைப் பாதுகாக்க முயன்றபோது அதன் உள்நோக்கம் தெளிவானது. மீண்டும் ஜே.வி.பி. எழுச்சியடைவதனால் அது இந்தியாவுக்குச் சாதகமானதாகவே அமையும் என்பதில் இந்தியாவுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

ஏற்கனவே ஜே.வி.பி., பல்கலைக்கழக மட்டத்தில் தீவிர போராட்ட உணர்வைத் தூண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவது தெரிய வந்துள்ளது. அதற்கு ஒரு வகையில் இந்தியர்களும் உறுதுணையாக இருப்பதான சந்தேகமே இன்று கொழும்பில் நிலவுகிறது. அத்தோடு- ஜே.வி.பி., சமாதானத்தை எதிர்ப்பது மட்டு மல்லாது அமெரிக்க எதிர்ப்பு வாதத்தையும் கொண்டது என்பதை இந்தியா நன்கு விளங்கிக் கொண்டுள்ளது.

மூன்றாவது சக்தி - முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம். பல தடவை இந்தியாவுக்குச் சென்று வருவதுடன் இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்கவே ஹக்கீம் செயற்படுவதாகத் தெரிகின்றது. சந்திரிகா - ரணில் மோதலை புதுடெல்கி தீர்த்து வைக்க வேண்டுமென அவர் கோருவதிலிருந்து இந்தியாவுடனான அவரது நெருக்கத்தை உணரமுடிகின்றது. பாலம் கட்டுவது, தூத்துக்குடிக் கப்பல் பயணத்தை ஆரம்பிப்பது எனப் பல செயற்பாடுகளில் ஹக்கீம் நாட்டம் கொண்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

இறுதியாக விடுதலைப் புலிகளுடன் முரண்படுகின்ற சக்திகள் என இனங்காணப்பட்டவைகளையும் பாதுகாக்க இந்தியா முயல்கிறது. குறிப்பாக முன்னர் ஆயுதக் குழுக்களாகச் செயற்பட்டு பின்னர் அரசியல் வாழ்வுக்கு வந்தவர்களாகத் தங்களை அறிவித்தவர்களுடன், அதிலும் குறிப்பான சில தலைமைகளுடன் இந்தியா மிக நெருங்கிய உறவைப் பேணவே விரும்புவதாகத் தெரிகிறது. அவர்களுக்கான பலவித உதவிகளையும் இந்தியா செய்யத் தயாராகவிருப்பதாகவே தகவலறிந்தோர் கூறுகின்றனர்.

எனவே மொத்தத்தில் இந்தியா எதிர்பார்ப்பது இலங்கையில் சமாதானம் அமெரிக்காவின் தலைமையில் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதாகும். அதனால் இந்தியாவின் பிராந்திய பலம் நசுக்கப்படுவதுடன் அமெரிக்காவின் கை ஓங்கிவிடும் என்பதே



இந்தியாவுக்கு மகிழ்ச்சியைத் தராத நோர்வேயூடான அமெரிக்காவின் செல்வாக்கு.

இந்தியாவின் அச்சமாகும். இதுவே இந்தியாவின் பிரதான நோக்கமாகும். அதைவிடப் பல முக்கியத்துவமான உள்நோக்கங்களும் காணப்படலாம். ஏனெனில் இந்தியாவுக்கு அப்பாற்பட்ட அரசியல் தீர்விலோ, அதிகாரப் பகிர்விலோ, சுயாட்சித் திட்டத்திலோ இந்தியாவை விட அதிகமானதாக இலங்கை அரசினால் பகிரப்படுமாயின் - அது தனக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தலாம் என இந்தியா கருதுவதாகவே தெரிகின்றது.

அதுமட்டுமன்றி பலமான சக்தியாகவுள்ள விடுதலைப் புலிகள் சர்வதேச அரங்கில் அங்கீகாரம் பெறுவதும், வட-கிழக்கில் அவர்கள் ஆட்சி அதிகாரம் கொண்டவர்களாக உறுதியாவதும் இந்தியாவுக்கு மனமொப்பாத செயல்களாகவே கருதப்படுகிறது.

இவற்றை அடையாது தடுக்க வேண்டுமாயின் அமெரிக்கத் தலையீட்டைத் தவிர்க்க வேண்டும். ஆனால், இந்தியாவின் அபிலாஷை எல்லை தாண்டிவிட்டதென்றே கருத முடிகிறது. படிப்படியாக இலங்கை இனப்பிணக்கு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாக நகருகின்றது.

எனவே தன் கையை விட்டுப் பிரிந்து செல்லும் - இலங்கை இனப் பிரச்சினைக்கான மேலதிகாரத் தன்மை, இந்தியாவுக்கு விருப்பத்தைத் தராதது மட்டுமல்ல, அமெரிக்காவின் செல்வாக்கு இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் அதிகமாகவும் - இந்தியாவைப் பொறுத்தமட்டில் முக்கியமான விடயங்களேயாகும். எது எப்படியிருந்தாலும் இந்தியா இவ்வாறான பின்னடைவுகளைத் தவிர்க்க தொடர்ந்தும் ஏதாவதொன்று செய்துகொண்டேயிருக்கும். அவற்றில் ஒன்றுதான், தாய்லாந்து அரசுககு அழுத்தம் கொடுததது, தொடர்ந்தும் அங்கு பேச்சுக்கள் நடைபெறுவதை தடுப்பதான இந்திய அரசின் இராஜீக அழுத்தமாகவும் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

*

- ஐங்கரன்.

# தீராத பிரச்சினையாகத் தொடரும் வேலையற்ற பட்டதாரிகள் நிலை

நாடளாவிய ரீதியில் வேலையறறு இருந்த 16 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பல்வேறு துறைகளில் உடனடி நியமனம் கடந்த 1999 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது.

தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, வேலையற்றிருந்தும், கீழ் உழைப்பிலும் இருந்த பட்டதாரிகளுக்கு பல்வேறு திணைக்களங்களிலும், பாடசாலைகளிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் நியமனம் வழங்கப்பட்டது.

நியமனம் பெற்ற பட்டதாரிகள் ஆரம்பத்தில் 4000 ரூபா ஊக்குவிப்பு வேதனம் வழங்கப்பட்டு அபிவிருத்தி உதவியாளர், உள்ளூராட்சி உதவியாளர், சமுர்த்தி கணக்காய்வாளர், முகாமைத்துவ உதவியாளர், நூலக அபிவிருத்தி உதவியாளர், மொழிபெயர்ப்பாளர், அபிவிருத்தி இணைப்பாளர், இளைஞர் சேவை அதிகாரி எனப் பல்வேறு தரத்திலும் நியமனம் வழங்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நியமனங்கள் அமைச்சுகளுக்கு பாரப்படுத்தப்பட்டன.

இவ்வாறு நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு ஒரு வருட பயிற்சியின் பின்னர் 2000 ஆம் ஆண்டு முதல் நிரந்தர நியமனமும் கடமைப் பட்டியல்களும் வழங்கப்பட்டன.


இதன் மூலம் 1994, 1995, 1996 பகுதியில் வேலையற்று இருந்த பட்டதாரிகள் 10 ஆயிரம் பேருக்கு வேலலவாய்ப்புக் கிடைத்தது.

யாழ். மாவட்டத்தில் மட்டும் 285 சிறப்புப் பட்டதாரிகளுக்கு அவரவர் பட்டங்களின் தன்மைக்கேற்ப நியமனங்களும் பதவிப் பெயர்களும் வழங்கப்பட்டு இன்றுவரை உத்தியோக கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் இவர்களைத் தவிர வேலைவாய்ப்புப் பெறாதோரில் - 50 வீதமானவர்கள் ஆசிரியர் வேலை பெற ஏனையவர்கள் தொடர்ந்தும் வேலையற்ற அணியிலேயே உள்ளனர்.

இன்று 1996, 1997, 1998 காலப்

**செய்திக் கட்டுரை**



பகுதியை விட 1999, 2000, 2001 ஆம் ஆண்டு அணிகளின் ஊடாக யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளின் நிலை மிகவும் வேதனைக்குரியதாகவுள்ளது.

தினசரி பத்திரிகைகளைப் புரட்டினால் ஆளணி உருவாக்கம் செய்யக் கூடாது, புதிய நியமனம் வழங்கக் கூடாது, உள்ள வெற்றிடங்களை உடன் காலியாக்க வேண்டும், திறைசேரியின் நிதி ஒதுக்கீடு இல்லை என்ற செய்திகளே வெளியாகி வருகின்றன.

இன்று யாழ். மாவட்டத்திற்கு பல அமைச்சர்களும், அமைச்சு செயலாளர்களும், அதிகாரிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்து செல்கின்றனர். அழிவுகளை மதிப்பிடுகின்றனர், இளைஞர் யுவதிகள் படும் கஷ்ட துன்பங்களைப்பற்றி விவாதம் செய்கின்றனர். ஆனால் எவரும் இன்றுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் நிலைமைகளை ஆராய்ந்தார்களா? தீர்வு தந்தார்களா? என்றால் இல்லை என்றே கூறலாம்.

இன்று வடக்கு - கிழக்கில் 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்ற நிலையில் உள்ளனர்.

மேற்படி பட்டதாரிகளுக்கு சாக்குப்போக்குச் சொல்லி அவர்களது மனநிலையை தொடர்ந்து பாதிக்காவண்ணம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அமைச்சர்களும் நடவடிக்கை எடுப்பார்களானால், ஓர் அளவு வேலைத் தளம்பல் நிலையைக் குறைத்து சமூக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தலாம்.

இன்றுள்ள நிலையில் - வேலையற்ற பட்டதாரிகளோடு ஜீ.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரம் கற்று மேற்படிப்புக்குச் செல்லாத இளைஞர் - யுவதிகளுக்கும் கூட பொருத்தமான வேலைகள் இங்கு உருவாக்கம் செய்யப்படவில்லை.

இவ்வாறான சூழலில் படித்திருந்தும் பட்டம் பெற்றிருந்தும் வேலையற்று வாடும் ஆயிரக்கணக்கானோரில் நிலை பற்றி எவராவது தகுந்த வகையில் கருத்திலெடுத்து செயற்படவேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

- செல்வராசா ரமேஷ்.

# கிழக்கு மாகாணத்துக்கு தனி ஆளுநர் இறுதி முடிவு எடுக்கப் போகின்றேன்

## என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திற்குத் தனியான ஆளுநர் ஒருவரை நியமிக்குமாறு தேசிய அமைப்புப் பேரவை விடுத்த கோரிக்கை தொடர்பாக, அரசியல் யாப்புக்கு அமைவாக - அரசியல் நிலைமையினைக் கருத்திற்கொண்டு இறுதித்தீர்மானம் ஒன்றை எடுக்கவிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கள நாடாளுமன்றக்குழு உட்பட 21 அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை நேற்று சந்தித்துப் பேசினர்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னர், அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒனறிணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணம தற்பொழுது அவசரகாலச்சட்டம் இல்லாததன் காரணமாகத் தனித்தனியாகப் பிரிக்கப்படுவது அவசியம். இதனால், கிழக்கு மாகாணத்திற்குத் தனியான ஆளுநர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று 21 அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

## கணினி மயப்படுத்தப்படும் இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் இரண்டாம் கிளை, யாழ்ப்பாணத்தில் டிசம்பா 2ஆம் திகதி தொடக்கம் கணினி மயமாக்கப்பட்டு தன்னியக்கச் சேவையை ஆரம்பிக்கவுள்ளது. இச் சேவையை 2ஆம் திகதி காலை 9 மணியளவில் இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரீ.எஸ். ரணசிங்க ஆரம்பித்து வைப்பார்.

## பிள்ளைகள் சண்டை வாள் வெட்டில் முடிந்தது

சிறுபிள்ளைகளினால் உருவான சண்டை வலுவடைந்து வாள் வெட்டில்முடிவடைந்தது.

மேற்படி சம்பவம் ஏழாலை தெற்கு, சுன்னாகத்தில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த இராசதுரை இளையதாஸ் (வயது - 24) என்பவர் கழுத்துப் பகுதியில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (60)

## வட-தென் கலைஞர்கள் கலந்துகொண்ட அமைதிக்கான இலக்கிய வட்டம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அமைதிக்கான இலக்கியவாதிகள், கலைஞர்கள் மாநாடு ஒன்று யாழ்ப்பாணத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நேற்று நடைபெற்றது.

தென் பகுதியிலிருந்து வருகை தந்த எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்களுடன் யாழ்ப்பாணத்திலுள்ள எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்களும் நேற்றைய மாநாட்டில் கலந்து கொண்டனர்.


நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இம்மாநாடு, நான்கு அமர்வுகளாக நடைபெற்று மாலை 6 மணிக்கு நிறைவுபெற்றது. இம் மாநாடு கூட்டுறவாளர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

## இலவச தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சிநெறி

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்த, பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து - தட்டச்சுப் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இலவசமாக நடாத்தப்படவுள்ள இப்பயிற்சிநெறிக்கு டிசம்பர் 19ஆம் திகதிக்குமுன் விண்ணப்பிக்குமாறு கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## ரோக்கியோ மாநாட்டுக்கான பணிகள் நேரில் கவனிக்க ரணில் ஜப்பானுக்கு !



(கொழும்பு)

ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் அடுத்த உதவவழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- அடுத்த வாரம் ஜப்பானுக்குச் செல்கின்றார்.

ஒஸ்லோ மாநாட்டின் தீர்மானத்தின்படி-பாரிய நிதியுதவி வழங்கும் மாநாடாக ரோக்கியோ மாநாடு அமையவிருப்பதும், இம் மாநாட்டிலும் விடுதலைப்புலிகளின் உயர் மட்டப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவிருப்பதும தெரிந்ததே.

இம்மாநாட்டின் பூர்வாங்கப் பணிகளைக் கவனிப்பதோடு, ஜப்பானுடன் இலங்கையின் இராஜீகத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு, இவ்வருடத்துடன் 50 ஆண்டுகள் பூர்த்தியானதை ஒட்டிய வைபவங்களிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

ஏற்கனவே, ஒஸ்லோவில் வைத்து- புனர்வாழ்வு, புனரமைப்பு உதவிகளுக்கென ஜப்பானிய அரசு நியமித்த உயர்மட்டப் பிரதிநிதி யசுகி அகாஷியை பிரதமர் ரணில் சந்தித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கசிப்பருந்திவிட்டு குளித்தவர் கிணற்றில் வீழ்ந்து மரணம்

(வசாவிளான்)

கசிப்பு அருந்திவிட்டு கிணற்றில் குளிக்கப்போனபோது, கிணற்றில் தவறி விழுந்த நபர் பரிதாபகரமாக மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் நிலாவரைப் பகுதியில் இடம்பெற்றது. பொன்னன் சுந்தரம் என்ற 55 வயது நபரே மரண மானவராவார். இவர் ஏழு பிள்ளைகளின் தந்தையுமாவார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (114)

## இன்றைய நாள் இனிய நாள்

**30-11-2002 - சனிக்கிழமை**

**சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் - 14ஆம் திகதி**

*திதி* :- ஏகாதசி இரவு 10.29 வரை அதன்மேல் துவாதசி

*நட்சத்திரம்* :- மாலை 5.42 வரை அத்தம் அதன்மேல் சித்திரை

*ராகுகாலம்* :- 9.14 - 10.44

*சுபநேரம்* :- 3.14 - 4.44

**மேடம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, நோய் நீக்கம், எதிரியின் மனவலிமை குன்றுதல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- புத்திரர் தேகசுகக்குறைவு, வைத்தியச் செலவு, பொதுச் சேவையில் மனஸ்தாபம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமம்.

**மிதுனம்** :- மாதா தேகசுகக் குறைவு, உறவினரால் செலவு, வீண் அலைச்சல், வாகனச் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- மனத்தைரியம், எடுத்த காரியம் வெற்றி, தெய்வவழிபாடு, சமயநூல் பாராயணம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**சிங்கம்** :- பணவரவு குறைவு, தன்னையறியாத செலவு, மனச்சஞ்சலம், வீட்டில் விவாத அரங்கு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**கன்னி** :- தெய்வவழிபாடு, சமயநூல் பாராயணம், விருந்தினர் வருகை, சிற்றுண்டி பரிமாறல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- எடுத்த காரியம் தடை, கர்வத்தினால் செலவு, உடனலக் குறைவு, மனஸ்தாபம், கல்வி சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- பணவரவு, உறவினர் நண்பர் மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, சமய நூல் பாராயணம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- தொழில் முன்னேற்றம், புதிய முயற்சியில் ஈடுபடுதல், சமூக சேவையில் மதிப்பு, கல்வியில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- பிதாவுடன் மனஸ்தாபம், தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, எதிரி தொல்லை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகக் குறைவு, வீண் பிரச்சினை, தூரப்பிரயாணம் தவிர்க்க வேண்டும், கல்வி முன்னேற்றம்.

**மீனம்** :- மனமகிழ்ச்சி, பெண்கள் உளப்பூரிப்பு, கௌரவம், ஆடை ஆபரண பலன், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

## பேச்சுக்கு அரசு-புலிகள் அளிக்கும் ஆதரவு உலக நாடுகளுக்கு ஒரு நல்ல பாடம்

### நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன் புகழாரம்

(கொழும்பு)

காசோலைகள் மூலம் சாதாரணமான நிதியுதவிகளை வழங்கி வந்த ஜப்பான், இலங்கைப் பிரச்சினை குறித்து ஆழமான ஆர்வம் கொண்ட நாடாக மாறியுள்ளது என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில், சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு மிக நல்ல நிலையை எட்டியுள்ளது. இது குறிப்பிடத்தக்க வரவேற்புக்குரிய விடயமாகும்.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர், அமெரிக்கா எடுத்த அரசியல் நிலைப்பாடே இலங்கைக்கான தீர்வு முயற்சியில் அமெரிக்காவின் பங்களிப்பாகும். இன்று ஜப்பான் போன்ற நாடுகள் தீர்வு முயற்சிகளில அதீத ஆர்வம் காட்டிவருகின்றன.

தனியே நிதியுதவிகளுடன் மட்டும் நின்று விடாமல், அரசியல் ரீதியாக ஆழமான ஆர்வத்துடன் அவை பங் காற்றத் தொடங்கியுள்ளன. இந் நாடுகளில், உதவி வழங்கும் நாடு என்ற நிலையில் இருந்து ஜப்பான் அரசியல் பங்காற்ற வந்திருக்கின்றது.



பேச்சுவார்த்தைகளின் முன்பாக உள்ள முக்கியமான சவால், மீண்டும் யுத்தம் வெடிக்கக் கூடாது என்பதேயாகும். தடைகளுக்கு மத்தியிலும் இருதரப்புக்களும் பேச்சுக்களில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவது மற்றய நாடுகளுக்கு ஒரு பாடமாக அமையுமென விதார் ஹெல்கிசன் மேலும் தெரிவித்துள்ளார்.

## தியாகத்தினாலும் இரத்தத்தினாலும் கிடைத்ததே இச் சமாதான நிலை

### இலக்கியவாதிகள் கூட்டத்தில் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சூ.சிறில்

(யாழ்ப்பாணம்)

எமது போராளிகளினதும்,எமது மக்களினதும் தியாகத்தாலும், அர்ப்பணிப்பாலும், இரத்தத்தினாலும் கிடைக்கப்பெற்ற இந்த சமாதான சூழ்நிலைகளில் நின்று கொண்டு அமைதிக்கான இலக்கியவாதிகள், கலைஞர்கள் மாநாட்டை நடாத்துகின்றோம். இந்த சமாதானம் நிலைபெறவேண்டுமானால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முற்றுமுழுதாக அமுலாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண திருமறைக் கலாமன்றத்தினால் நேற்று யாழ்.ப.நோ.கூ.ச. கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட "அமைதிக்கான இலக்கியவாதிகள், கலைஞர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ. சிறில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில்- தமிழர்களாகிய நாம் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், பொருண்மிய, பண்பாட்டு சுபீட்சத்துடன் வாழவேண்டுமென்பதற்காகவே போராடினோம்.

இந்த போராட்டமானது தீக்கதரிசனமான அரசியல் முடிவென்ற காரணத்தால்தான் மக்கள் தமது மனப்பூர்வமான பங்களிப்பை எமது தேசியத் தலைவருக்குக் கொடுத்து மக்கள் போராட்டமாக மாற்றியமைத்தார்கள். மக்களின் பெரும் பலத்துடன் நின்றுதான் மக்களின் வாழ்வியலுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.புலம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த மண்ணில் மீளவும் குடியமர முடியாத நிலையில் மக்கள் குடி நிலங்களிலும், வீடுகளிலும், கோவில்கள், பாடசாலைகளிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. தென்னிலங்கை கலைஞர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளராகிய நீங்கள் நேரிடையாக இவற்றைப் பார்த்திருக்கிறீர்கள்.


உண்மையின் தரிசனத்தை உங்கள் அரசுக்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறுங்கள். நாம் சமாதானத்தை நேசிக்கின்றோம், அதே சமாதானத்தைப் பாதுகாக்க விரும்புகிறோம் என்றார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நோர்வே செல்லும் பீரிஸ் குழுவில் பௌத்த பிக்கு ஒருவரும் பங்கு ?

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றச் செல்லும் அமைச்சர் பீரிஸ் தலைமையிலான அரச தரப்பு குழுவினருடன் பௌத்த பிக்கு ஒருவரும் இன்று செல்கிறார்.

இன்று அதிகாலை 2.50 மணிக்கு விமானத்தில் புறப்பட்ட அமைச்சர் பீரிஸ், அமைச்சர் ஹக்கீம் ஆகியோருடன் மாதுளுவெவ சோபித தேரோ எனும் பௌத்த பிக்குவும் உடன் சென்றார். இவர் அரச தரப்பு குழுவுடன் பேச்சுக்களில் பங்குபற்றுவாரா இல்லையா என்பது தெரியவரவில்லை. இனவாதத்திற்கு எதிரான அமைப்பின் தலைவரான இவர், தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து சாதகமாகவும், ஆதரவாகவும் அடிக்கடி கருத்துக்கள் வெளியிட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.



சிறுபான்மையினரை மரத்தைச் சுற்றும் சிறு கொடிகள் என வர்ணித்த முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவை பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன அண்மையில் சந்தித்தபோது எடுத்த படம் இது.

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களை பொருத்தவும் மிதப்புப் பற்களை 3 மாதத்தில் சீர்செய்து கொள்ளவும் நாடுங்கள்

எரிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2222486 கிளை: கொக்குவில், சுன்னாகம்.
(சி-198)

# மனித உரிமை ஆணைக்குழு இன்று யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)
தென் பகுதியிலிருந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

இக்குழுவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொப்பிறி குணதிலக, பணிப்பாளர்களான எம்.செல்வக்குமரன் மற்றும் சாந்த சரத் குரே, மனோரி முத்தவெட்டுகம ஆகியோரே இங்கு வரவுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் நிலவும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராயவுள்ளதுடன் விடுதலைப்புலிகள், படையதிகாரிகள், மற்றும் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.27 | 96.72 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 148.50 | 149.80 |
| 1 யூரோ | 94.92 | 96.70 |
| 1 சுவிஸ் பிராங் | 64.25 | 65.35 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.24 | 54.22 |
| 1 ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1 சவூதி றியால் | 25.74 | 25.74 |

இணுவில் கந்தசுவாமி கோயில்
இளந்தொண்டர் சபை சிறுவர் பாடசாலை
கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

காலம்:- 30.11.2002 சனிக்கிழமை
பிற்பகல் 4.00 மணிக்கு
தலைவர்:- செந்தில்நாதன்
பிரதம விருந்தினர்:- திரு. செ.சர்வேஸ்வரன்
(ஹற்றன் நஷனல் வங்கி)
பரிசில் வழங்கல்:- திருமதி சர்வேஸ்வரன்

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்
(சி/241) நன்றி (இ.தொ.ச)

எடிசன் அக்கடமி
யாழ்ப்பாணம் - நல்லூர்
தரம் 6 முதல் O/L வரை
ஆரம்பமாகிவிட்டது

* அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
* ஒவ்வொரு வகுப்பிற்கும் கணிதம் வாரத்தில் 6 மணி நேரம் நடைபெறும்

நிர்வாகி
B.P. பாஸ்கரன்
(048)

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
E.Mail - thangan 672002 @ yahoo .com
T.P-021-2222588

தரம் 6 முதல் பல்கலை மற்றும் அலுவலர்கள் வரை ஒரே கூரையின்கீழ் மிகத் தரமான கல்வியை வழங்குகின்றது.

05-12-2002 இல் ஆரம்பிக்கும் புதிய தவணைக்கு தரம் 6 முதல் A\L வரையான புத்தக வகுப்புகளுக்கு (Text books) புதிய அனுமதிகள் தற்போது நடப்பில் உள்ளது.

01-12-2002 இல் புதிய இலக்கண வகுப்பு பிரிவு V ஆரம்பம்
Sat and sun 5p.m (old)

புதிய அனுமதிக்கான பதிவுக் கட்டணம் 100/-
இலக்கணக் கற்கை நெறிக்கான முழுக்கட்டணம் 1000/-
புத்தக வகுப்பிற்கான வருடாந்தக் கட்டணம் 600/-

மேலதிக விபரங்களுக்கு,
Director.
ஆசிரியர்
K.T. Rajah(S.S)
Why fear, We are here
(சி-191)

## தமிழ் இளைஞனுக்கு நஷ்டஈடு வழங்க நீதிமன்று உத்தரவு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலத்தில், பொலிஸாரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சுப்பிரமணியம் சந்திரசேகரன் என்ற தமிழ் இளைஞன் ஒருவரை விடுதலை செய்த கொழும்பு மேல்நீதிமன்றம், அவருக்கு 50,000 ரூபாவை அரசு நஷ்டஈடாக வழங்க வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளது.

## பிரபாகரன்....

தனது நிலைப்பாட்டை ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்.

அவரது இந்த நிலைப்பாடு - மேற்கொள்ளப்படவிருக்கும் அரசியல் பேச்சுவார்த்தைகள் நல்ல பயனைத் தருவதாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்குக் காரணம் இரு தரப்பினரதும் நிலைப்பாடு இனியும் ஒன்றுடன் ஒன்று இணைய முடியாதவை அல்ல என்பதே ஆகும்.

உள்ளான சுயநிர்ணய உரிமை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த தமது இயக்கம் தயாராக இருக்கிறது என பிரபாகரன் கூறியுள்ளார்.

அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பூரணமாக அமுல் செய்வது பற்றியும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கின்றது.

ஒஸ்லோவில் நடைபெற்ற, சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும கூட்டம் இந்த வகையில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

சமாதானத்தை அடைவதில் இலங்கைக்கு பூரண ஆதரவு வழங்க சர்வதேச சமூகம் உறுதியளித்துள்ளது.

பல நாடுகள் நிதியுதவி வழங்கவும் உறுதியளித்திருக்கின்றன என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## புலிகளின்....

எனினும் நம்பிக்கையைத் தோற்றுவிக்க இருதரப்பிலும் இன்னும் அதிக விட்டுக் கொடுப்புத் தேவை என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் விஞ்ஞான மறுசீரமைப்புத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து வந்த பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

# மிதிவெடிகள், கண்ணிகள் அகற்ற பிரான்ஸ் தயார்

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து கண்ணிவெடிகளையும், மிதிவெடிகளையும் அகற்றுவதற்கு, தான் உதவத்தயாரென பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில்-

உலகத்தில், கண்ணிவெடிகள் அகற்றுவதில் மிகவும் திறமை வாய்ந்த நாடான பிரான்ஸ்- தன்னால் முடிந்தளவிலான சகல

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா அரியரத்தினம்
(இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர்)

அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா அரியரத்தினம் அவர்கள் 28.11.2002. வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி செல்லம்மா அரியரத்தினம் அவர்களது கணவரும் காலஞ்சென்ற ஈஸ்வரதாசன்(ஆசிரியர்), ஈஸ்வரதேவி, ஈஸ்வரமோகன் (லண்டன்), குகேஸ்வரன் (லண்டன்), கோகுலேஸ்வரன் (லண்டன்), உதயகுமார் (லண்டன்), தயாரஞ்சினி (லண்டன்), சரோஜினிதேவி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சகலகலாவல்லி, நடராசா (அதிபர் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி) தங்கலக்ஸ்மி (லண்டன்), தமயந்தி (லண்டன்), சிவயோகராசா (லண்டன்), இராமேஸ்வரன் (லண்டன்), செல்வராணி (லண்டன்), ஆகியோரின் மாமனாரும், சாலினி, யாழினி, இளங்குமரன், தரன் (லண்டன்), அரன் (லண்டன்), ரமியா (லண்டன்), நித்தியா (லண்டன்), தர்சினி (லண்டன்), சயந்தன் (லண்டன்), ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2002. (நாளை) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.நடராசா (மருமகன்)
அ.உதயகுமார் (மகன்)

*ஈஸ்வரம்ஸ்,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(சி/240)

## திருமதி சிவசம்பு தங்கமுத்து

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிவசம்பு தங்கமுத்து 29.11.2002. நேற்று (வெள்ளிக்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.சிவசம்புவின் அன்பு மனைவியும் திருமதி கா.சிவபாக்கியம், திருமதி சு. செல்வநாயகி, திருமதி து. பகவதிப்பிள்ளை, பாலசிங்கம் (நோர்வே), பாலச்சந்திரன் (மாவட்ட வைத்தியசாலை, பருத்தித்துறை) பாலதுரை(லண்டன்) செல்வநாயகம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயரும்

வே.தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) ந.சுப்பிரமணியம்(இளைப்பாறிய அஞ்சல் ஊழியர்) அமரர் துரைராஜா, திருமதி பா. யோகராணி (நோர்வே), திருமதி பா.கெங்காதேவி திருமதி பா. மதுராதேவி (லண்டன்), திருமதி செ.சுசிலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2002. நாளை (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா.கஜபக்ஷன்
(பேரன்)

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

(சி/242)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.